
# வெளிச்சம்

ஆடி - 1993
20 =




விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

உங்களின் அனைத்துத் தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்



தமிழருவி
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்



பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
31-7-1993
யாழ்ப்பாணம்

மேகம் தழுவி விளையாடும் உயர்மலைகள்
ஏதுமற்ற தேசம்; என்றாலும்
சிரித்தபடி,
சாவைத் தன் தோள்மீது தாங்கி;
எதிரிமுகாம்,
போகும் புலிவீரர் பிறந்த நிலம்.
வற்றா அருவி வருட, மலர்க்காடு,
சிற்றாடை பூண்டு சிரிக்காத நிலமெனிலும்,
சின்னப்பூவெல்லாம் செருக்களத்தில் நின்றாடி,
''சன்னப்பூ'' நெஞ்சில் சாத்தும் தமிழீழம்.
ஆழக் கிணற்றில், நீர்
அள்ளிப் பயிர் வளர்ப்போர்,
வாழும் நிலம்.
புதுநெல்லின் வாசனைகள்,
வீசும் காற்றோடு வீசும்.
தூரத்து,
தோட்டக்கிணற்றின் துலாவிலிருந்து பாட்டுவரும்.
ஆட்டக் காவடியால், அதிரும் நிலமிருந்து,
புழுதி கிளம்பிப் போய் நிலவை வழிமறிக்கும்.
விழுது சுமந்து விருட்சங்கள் குடைபிடித்து,
தூரவழி நடப்போர் தூங்க மடிவிரிக்கும்.
வீரம் விளைந்து விளையாடும் எம்மண்ணில்,
கையளவு அள்ளக் கருதி,
எவன் வந்தாலும்.
மெய்யாய் அவன் திரும்பி மீளான்.
இது உறுதி.

— மாலிகா —

□□

வெளிச்சம்

ஆடி — 1993

இதழ் — 16

அன்பார்ந்த தமிழீழ மக்களே!
புரட்டாதி மாத 'வெளிச்சம்' இதழ், இரண்டாம் ஆண்டு நிறைவுமலராக அதிகபக்கங்களுடன் வெளிவரவுள்ளது. இரண்டு ஆண்டுகளென்பது காலச் சுழலில் கடுகளவேயானாலும் தமிழீழக் கலை, இலக்கியக் கணக்கெடுப்பில் கணிசமானது. இதுவரை வெளிச்சத்தின் பதினைந்து இதழ்கள் வெளிவந்ததே பெருமை கொள்ளக்கூடியது. அச்சுத்தாள், மை, எரிபொருள் என்று எதிரியால் எல்லாமே இல்லாதவையென்று இங்கு ஆனபின்பும் வெளிச்சம் தொடர்ந்து வெளிவருவது பலருக்கு வியப்பூட்டும்.

எமது தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் கலை, இலக்கியப் பற்றும், எமது இயக்கத்தின் பிறபிரிவுகளின் உண்மையான ஒத்துழைப்பும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் சோராத முயற்சியும்தான் வெளிச்சத்துக்கு ஆதாரமானவை. அத்துடன் எம்முடன் இணைந்து எமது விடுதலைப் போராட்டத்தை நீராட்டி, பொட்டிட்டு, புதுக்கோலம் பூணவைக்கும் கலை, இலக்கியப்படைப்பாளிகளும், அறிஞர்களும், வாசகர்களாகிய இலக்கிய ஆர்வலர்களுமே வெளிச்சத்துக்கு வேரானவர்கள். இரண்டு தலைமுறைக்கு இடையிலான இணைப்புப்பாலமாக வெளிச்சம் இருந்து வருகிறது. பழைய தலைமுறைப் படைப்பாளிகளுக்கு களமமைத்தும், புதிய தலைமுறைப் படைப்பாளிகளுக்கு உரமளித்தும் தொடரும் வெளிச்சத்தின் பணி இனியும் தொடரும்.

கடல் கடந்தும் வெளிச்சத்தின் கதிர்கள் பரவிவருவதைக்காணக்கூடியதாகவுள்ளது. பிரான்சு, பிரித்தானியா, ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளில் இங்கிருந்து புலம்பெயர்ந்தவர்களால் வெளியிடப்படும் கலை, இலக்கியச் சஞ்சிகைகளில் வெளிச்சத்தின் பலபடைப்புக்கள் மறுபிரசுரம் செய்யப்படுகின்றன. தமிழீழத்தின் உள்ளக உணர்வுகளை 'வெளிச்சம்' வெளிப்படுத்துகின்றது என்பதையே இது உணர்த்துகின்றது.

போராட்டமே வாழ்வாகி, வாழ்வே போராட்டமாகிய எம் மண்ணின், மக்களின் உறுதி, உணர்வு, இறுதியில் வெல்வோம் என்ற நம்பிக்கை, தலைமை, வழிகாட்டல், போராளிகள்,

மாவீரர்களின் கனவு இவையெல்லாம் இணைந்த கலவையே வெளிச்சத்தை வெளிச்சமாக்கும் காரணிகளாகும்.

"இந்தமண் யாருக்கும் பணியாது — தமிழ் ஈழமண் எதிரிமுன் குனியாது"

என்பதற்கிணங்க எங்கள் தாயக விடுதலைக்கான போராட்டம் நிமிர்ந்து நிற்கிறது. உலகத்தின் விழிகள் எம்மண்ணை உற்றுப்பார்க்கத் தொடங்கிவிட்டன. சர்வதேச சமூகம் எங்கள் போராட்டத்தின் தன்மைகளை அறிந்துகொள்ள விரும்புகின்றது. புள்ளியளவான எங்கள் தாயகம் போராடும் வேகத்தைப் பார்த்து ஆங்காங்கே விடுதலைக்காகப் போராடும் அமைப்புக்கள் ஆச்சரியப்படுகின்றன.

எமது கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்கு வெளிச்சத்தின் கருத்தொன்றைக் காணிக்கையாக்க விரும்புகின்றோம்.
இன்றையதலைமுறைக்கு சத்தியத்தின் பக்கத்தில் நிலைகொண்டிருக்கும் எங்கள் போராட்டத்தை உணர்த்தவும், இனிவரப்போகும் சந்ததிக்கு எப்படியெப்படிப் போராடி எங்கள் தாயகத்தை மீட்டெடுத்தோம் என்பதைச் சொல்லவும், உங்கள் எழுதுகோல்கள் எழுதட்டும். காலத்தின் கண்ணாடியான உங்கள் கருத்துக்கள் மேலும், மேலும், இனியும், இனியும், எங்கள் விடுதலைப் போருக்கு உரமூட்டட்டும்.
எல்லோரும் ஒன்றிணைந்து எங்கள் தலைமுறைக்குள்ள வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவோம்.
அடுத்த தலைமுறை 'இது என் அப்பா போராடிப் பெற்றுத்தந்த விடுதலை', 'இது என் அம்மா போராடி எடுத்தளித்த சுதந்திரம்' என்று சொல்லிச் சொல்லி மகிழ்வடையட்டும். இந்த வரலாற்று வழித்தடத்தில் உங்களுடன் இணைந்து நடக்க 'வெளிச்சம்' காத்திருக்கின்றது.

"தாயக விடுதலையென்பது வெறும் மண்ணின் விடுதலை மட்டுமல்ல; சகல அடிமைத் தளைகளிலிருந்தும் விடுதலை பெறுவதே"





தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன்
அவர்கள்

# கரும்புலிகள் எங்கள் போராட்ட மரபில் புதிய போர் வடிவம்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில், முழு இலங்கைத் தீவையும் அதிரவைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலிவீரன் கப்டன் மில்வர், ஓர் ஒப்பற்ற சாதனையை நிலை நாட்டினான். எமது விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம்புலி வீரன், தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்யமுடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனி மனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான். எரிமலையைச் சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக்கவைத்தான்.

இந்தப் பூகம்பமான தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றியமைத்தது. எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக்கொண்டது. தனி மனிதனாக, எமது போராளி ஒருவன், தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

முதன் முதலாக, எமது போராட்ட வரலாறு, தியாகத்தின் அதியுன்னதமான ஒரு அற்புதத்தைப் பதிவுசெய்துகொண்டது. அன்றிலிருந்து எமது போராட்ட மரபில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்பட்டது. என்றுமில்லாத வகையில் ஒரு புதிய போர் வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப்பார்க்கவும் முடியாத தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி வீரர்களின் தோற்றமும், தற்கொடைப் படையாக அவர்களின் வளர்ச்சியும் எழுச்சியும் மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச் சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தது.

நாம் இன அழிவை எதிர் கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்குக் குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை.நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக் கட்ட உறுதி பூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டுகொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான ஆபத்தான சூழ்நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில் நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து, ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்த வேண்டும். இந்தத் தேவையை, நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. அல்லாத பட்சத்தில், நாம் இனவாரியாக அழிந்து போவதைத் தவிர்க்கவே முடியாது.

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள்; அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சுபோன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றுக்கும் மேலாக தன்னையே காதலிக்கிறான். தனது உயிரையே நேசிக்கிறான். உயிர் வாழ வேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர்வாழ விரும்புவதால் உயிர் அற்றுப்போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்குப் பயப்படுகிறான். இது மனித இயல்பு. இயற்கையின் நியதி.

ஆனால் ஒரு கரும்புலிவீரன் தன்னை விட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக்குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது; நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது, தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ள வேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும்போதுதான் வீரம் தோன்றுகிறது. துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்

லாம் மூலமானது மரணபயம். இந்த மரண பயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்றுவிடுகிறான். அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறு கிறான்.

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்துவிடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத் திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கி லேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

'கரும்புலி' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப் பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளை யும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும், செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே 'கரும்புலி' என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிமமாக அமையப்பெற்றிருக் கிறது.

இந்த இரகசியத் தன்மை கரும்புலி களின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதார மானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால், அந்த தனிமனித தனித்துவத்துக்கு அப்பால் செயற்பாடே இங்கு முதன்மை பெறுகிறது. மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே, ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல் லறைகளில் அநாமதேயமாக உறங்கிய போதும் அவர்களது அற்புதமான சாதனை கள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ்பெற்று வாழும்.

முகத்தை மறைத்து, பெயரையும் புக ழையும் வெறுத்து இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்து விட்ட இந்தச் சரித்திர நாயகர்களை நான் சிரம்தாழ்த்தி வணங்குகிறேன்.

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர் களை நான் அறிவேன். அவர்களது நெஞ் சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வு களையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று மனித விடிவை நோக்கி நகரும் உந்துசக்தி யாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும்போது இனம் புரியாத உணர் வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக் கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதவாளர்களை எண்ணும்பொ ழுது எல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான

தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.

அன்றொருகாலம் அமைதி வழியில் உரிமை கேட்டு ஆர்ப்பரித்த தமிழினத்தை அடக்கு முறையாளனின் இரும்புக் கரங்கள் நசுக்கி விட்டன. இன்று நீதிகேட்டு நெருப்பாக எரியும் தமிழரின் ஆவேச எழுச்சியை எந்தச் சக்திகளாலும் நசுக்கிவிட முடியாது.

இது கரும்புலிகளின் சகாப்தம். இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் கொண்டுவிட்ட காலம்.

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், வரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும் எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போமாக. □□

□ □ □ □

"வெளிச்சம்"
கலை, இலக்கிய சமூக இதழ்

ஓவியம்:
தயா

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

அச்சு:
ம. மரியதாஸ்

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

வெளியீடு:
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்

போராளியின் பேனாவிலிருந்து..

கடல்மீது படகோடு போனோரை
கரைசேர்க்க முன்வாருங்கள்.
கண்ணீர்க் கடல்மீது மூழ்கி
மூச்சு அவிழும் உயிர்களுக்கு
கரைகாட்டுங்கள்.
அடிபோட்டும் ஓயாத பசியோடு
கைவிரிக்கும் பிஞ்சுகளை
காப்பாற்ற முன்வாருங்கள்.
அரசாலே
உடைமைகளின் கட்டவிழ்ந்து
ஏதிலிகளானோரை
ஏற்றிட வாருங்கள்.
பசிதன்னை — தினம் புசிப்போர்க்கு
புதிதாக ஏதேனும் ஊண் கொடுங்கள்.
கட்டட விருட்சங்கள்
மண்ணை மண்டியிட்டு
மரணித்து, மண்ணாகும் நிலைமாற்றுங்கள்.
நிலமகளின் வனஉடை
களையப்பட்டுவிட்டதே!
புதிய மரவுடைகளைப் போர்த்துங்கள்.
தலையினுள் முடங்கிக்கிடக்கும்
சிந்தனைகளை
கட்டவிழ்த்துவிடுங்கள்.
ஆழ்மன உணர்வுகளை
புடம்போட்டுக்கொள்ளுங்கள்.
வாழ்க்கை வாழ்வதற்கே — என்று
வாழ்வுத் தத்துவத்தை
செயலாக்குங்கள்.
எல்லோரும் தோள் கொடுங்கள்
சரிகிறது நம் இனத்தின் மாண்பு.
நம் வேலிகள் தாண்டி
படைய வேலிகள்
வீழ்த்திட வாருங்கள், கருவிகளோடு
வேலிகளைப் புதுப்பிக்கவேண்டும்.
நீர்கேட்கும் எங்கள் நிலத்திற்கு
குளங்கள் கட்டுங்கள்.
கவிகின்ற இருளுக்கு எதிராக
கூரொளிரும் வாளால் வீசுங்கள்.
திக்கெங்கும்
அடர்ந்து, பரந்து விரிகிறது வெறுமை
உலகத்தின் கண்களும் திறக்கட்டும்
முதலில்
உங்களின் கண்களைத் திறந்து வையுங்கள்

# கண்களைத் திறந்து வையுங்கள்

இளந்திரையன்




# சுயம்

குப்பிளான். ஐ. சண்முகன்

செல்வராசா அமைதியின்றித் தவித்தான். அவன் எதிர் பார்த்த மா திரி எதுவுமே நடக்கவில்லை. கா ல த் தின் மந்தகதியான சுழற்சியில் எல்லாமே மாறிவிடுமென அ வ ன் எதிர்பார்த் தான். மனிதர்கள் நல்லவர்களாகி விடு வார்கள்; சுயநலத்தை மட்டுமல்லாமல் பரநலத்தைப் பற்றியும் சிந்திப்பவர்க ளாய் இருப்பார்கள்; பேராசை பிடித் தவர்களாய் இருக்க மாட்டார்கள். தாம் வாழும் காலத்தைப் பற்றி அடிக் கடி நினைப்பவர்களாய் - நல்லவற்றை மட்டுமே செய்பவர்களாய் - மற்றவர்க ளின் மனங்கள் நோகாது நடப்பவர்க ளாய் - நாம் வாழும் காலத்தின் உன் னதமான தியாகங்களை உணர்ந்தவர் களாய்......

எல்லாமே வீணாகிவிட்டது. மனி தன் அதேமாதிரித்தான் வாழ்கின் றான் - முதல் மனிதனைப் போல; முரட்டுத் தோற்றம், கோரப்பற்கள், நீண்ட சடைகள், வெறித்த பார்வை, நிர்வாணக் கோலம் மாறி இருக்க லாம். ஆனால் அதேமாதிரித்தான்.... தவிர்க்கப்பட்ட பழத்தைப் புசிக்கும் அங்கலாய்ப்புடன், வெறியுடன், தீராத மோகத்துடன், காட்டுமிராண்டித் தனத்துடன்......

எல்லாரும் உபதேசிக்கிறார்கள். உபதேசம் செய்யும் உன்னதமான கலையில் எல்லாரும் வல்லவர்களாக இருக்கிறார்கள். உபதேசம், நன் னடத்தை, நற்பழக்க வழக்கங்கள், நல்வாழ்க்கை.

எள்ளானாலும் ஏழாகப் பகிர வேண்டுமென்பார்கள். ஆனால் சுவை யான பண்டங்களை ஒருவருக்கும் கொடாது ஒழித்து வைத்துத் தின் பார்கள்.

ஆரோக்கியமான வா ழ் வு க் கு உயிர்ச்சத்துக்களின் இன்றியமையாமை பற்றி உ ப தே ச ம் செய்வார்கள். ஆனால் அரிசியை நன்றாகக் குற்றித் தீட்டிச் சமைப்பார்கள். அரிசிக் கஞ்சியை வடித்து கன்றுக்குட்டிக்குக் கொடுத்துக் கொழுக்க வைப்பார்கள்.

சு கா தா ர ப் பழக்கவழக்கங்க ளென்று நீட்டி முழங்குவார்கள். கை கால் அலம்பிச் சாப்பிடமாட்டார்கள். உடைகளைத் தோய்த்து உடுத்தமாட் டார்கள், மலசலம் கழித்தபின் கால் கழுவமாட்டார்கள்.

நீதி, நேர்மை, நியாயமெனப் பேசு வார்கள். ஆனால் மற்றவர்களுடான கொடுக்கல் வாங்கல்களில் சரியாக நடந்து கொள்ளமாட்டார்கள்.

செல்வராசா ஏமாந்து போனான். வாழ்க்கையே வேஷம் போடுதல் என்பதாகப் போயிற்று. வேஷம் போடுபவர்களே வாழத் தெரிந்தவர்கள் என்பதாயிற்று. நன்றி மிக்கவர்களாய் வாலைக்குழைகின்றவர்கள் — எதிரிகளைக் கண்டால் குரைக்கின்றவர்கள் நாய் வேஷம் போட்டவர்கள்; குழைந்து பதுங்கி ஏமாற்றுகின்றவர்கள் — நரி வேஷம் போட்டவர்கள்; நம்மைவிட ஆளில்லை என்று நெஞ்சை நிமிர்த்தி நடக்கின்றவர்கள் - யானை வேஷத்தினர்; எதற்கும் மருண்டு ஒதுங்குகின்றவர்கள் - மான் வேஷதாரிகள்; ஆடி மயக்குபவர்கள்மயில் வேஷம் போட்டவர்கள். உலகமே வேஷதாரிகளின் உலகமாகப் போயிற்று.

செல்வராசா செல்வராசாவாகவே இருக்க விரும்பினான். தான் நினைப்பதே - தான் உழல்வதே தனது வாழ்க்கை என்று நம்பினான். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்; மற்றவர்கள் என்ன சொல்வார்களென்று எல்லாம் பார்க்காது, தன் வாழ்வு யாத்திரையின் நாற்பது வருடங்களைக் கடந்திருந்தான் அவன்.

இளமைப் பருவத்து நினைவுகள் வசீகரம் மிக்கவையாக இருந்தன. ஒரு இனிய கனவு போல அப்பருவம் கழிந்துவிட்டது. நடையாய் நடந்து தொலைதூர நகரத்துப் பாடசாலைக்குச் சென்ற நாட்கள் மங்கிய பதிவுகளாய் மனத்தில் மிதக்கின்றன. பரந்து விரிந்து விழுதூன்றி நிழல் பரப்பி நிற்கும் ஆலமரம்; மாரி வெள்ளத்தில் நிரம்பும் கோவில்குளம்; இலந்தை மரங்களும் விளா மரங்களும் நிறைந்த பற்றைக் காடுகள். இவற்றிலெல்லாம் இளம் பறவைகளாய் குதூகலித்துத் திரிந்த நண்பர்கள் கூட்டம். அப்போதெல்லாம் செல்வராசா செல்வராசாவாகவே இருந்தான். அவனின் நினைவுகள், அவனின் ஆசைகள், அவனின் கனவுகள் எல்லாம் அவனுடையவாகவே இருந்தன. அவன் மகிழ்ச்சியாக இருந்தான்; துக்கம் மிக்கவனாகச் சுற்றித் திரிந்தான்; எல்லைகாண முடியாத சோகத்தில் ஆழ்ந்து கிடந்தான்.

இளமைப்பருவத்து இனிய கனவுகள் அவனுள் முளை கொண்டிருந்த காலம். காணும் காட்சிகளிலெல்லாம் நளினமும், துடிப்பும், வசீகரமும் இழை இழையாய் பின்னி, இன்னிசைமயமாய் பொலிந்து கொண்டிருந்த பருவம். கண் அசைவும், கைவீச்சும், ஒய்யார நடையும், பின்னலின் நெளிவும், மின்னலடிக்கும் புன்னகையுமாய் — உலகமே கவர்ச்சிக் கணைகளால் அவனை இனிமையான துயரத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்த வேளைகள். இனம் புரியாத ஏக்கத்தில் அவன் தவித்துக் கொண்டிருந்தான். என்னவென்று சொல்லமுடியாத ஒரு தவிப்பு. ஏதேதோ எதிர்பார்ப்பு, இரவெல்லாம் கனவுகள். பகலில் ஒரு மோன மயக்கம்.

இளமையின் தவிப்பு என்று சொன்னார்கள். அவனுக்கு இணையாக ஒருத்தியைப் பிணைத்து வைத்தார்கள்.

தாபம், மோகம், தவிப்பு எல்லாம் அடங்கிப் போயிற்று. வாழ்வின் அர்த்தங்கள் புரிந்தன போலிருந்தன. ஒரு இனம்புரியாத அமைதி கவிந்தது. ஒரு சாந்தம் மனதில் நிரம்பிற்று. எல்லாமே அழகாய் - அமைதியாய் பொலிந்து போயிருந்தது.

இதிலெல்லாம் செல்வராசா செல்வராசாவாகவே இருந்தான்.

இணைந்த வாழ்க்கை தொடக்கத்தில் இரம்மியமானதாகவே இருந்தது. நாட்களின் நகர்வில் முரண்கள் தலைகாட்டத் தொடங்கின. தான் நினைப்பது போல உலகம் இல்லை என்ற பாடத்தையும் முதன்முதலில் தன் இணையிடமே அவன் கற்றான்.

மனிதர்கள் வேறு வேறானவர்கள்; மனங்கள் வேறு வேறானவைகள்; பழுத்து விழும் இலைகள் காற்றில் சுழன்று சுழன்று மிதக்கும் அழகில் அவன் திளைத்த போது - அவன் குப்பைகள் என்று மரங்களையே வெட்ட முற்பட்டான். அவன் நாயுடனும், கோழிகளுடனும், கன்றுக்குட்டியிடமும் பரிவாய் நடந்து, அவற்றுடன் ஒன்றிய போது — அவள் பைத்தியம் என்று கேலி பேசி, அவன் மனம் நோகச் செய்தாள். அவன் வானொலியில் மதுரைச் சோமுவின் சங்கீதத்தை இரசித்த போது - அவள் கிழவனின் ஊளறல் என்பதாய் அதைத் திருகிக் குலைத்தாள். அவன் அவளைத் தன் நேசத்திற்கும் நம்பிக்கைக்குமுரியவள் என்பதாகக் கொண்டு கரைந்த போது, அவள் அவனை தனக்கேயான வெறும் சடப்பொருள்களில் ஒன்றாகவே கருதி நடந்தாள்.

செல்வராசா தனக்குள் உடைந்து போனான். அப்போதும் கூட அவன் 'தானாகவே' இருந்து ஒரு கவிதை எழுதினான்.

என்னுடைய காலங்கள்
இப்படியே போகிறது.
வர்ணமில்லை,
வடிவமில்லை
வார்த்தைகளை மீறிநிற்கும்
அமைதியில்லை
அழகுமில்லை;
எந்நாளும் ஓர் நாளாய்
தடமழியா அத்தடத்தில்
என்னுடைய காலங்கள்
இப்படியே போகிறது.
தரித்து நிற்க
முடியாமல்
தறிகெட்டுப் போகிறது

என்னுயிரின் வேதனையை
இவ்வுலகில் யாரறிவார்.
என் இதயத் தாபங்களை
இங்கெவரோ அறிந்திடுவார்.
என் நரம்பின் துடிப்பெல்லாம்.........
என் இதயப் பிழிவெல்லாம்........
என் கவிதை —
என் கனவு —
என் காதல் —
என் அன்பு —
எல்லாமே இவ்வுலகில்
பார்ப்பாரே இல்லாத
பால் நிலவாய் போகிறது
எனக்கென்று எவருமில்லை
என்னை உணர்தற்காய்
என்னை உயர்த்துதற்காய்
என்னை உருக்கி
உயிரழிய வைப்பதற்காய்
என்னைக் கரைப்பதற்காய்......
என்னுடனே ஒன்றியதில்
தானும் கரைவதற்காய்......
எனக்கென்று எவருமில்லை.
எனக்கென்று எவருமில்லை
நான் தனியன்
நான் தனியன்
என்னுடைய
காலங்கள்
இப்படியே போகிறது

இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு செல்வராசா மாறிப் போனான். தன் சுயத்தை - தனித்துவத்தை இழந்தவனானான்; வெறும் நடைப்பிணமாய்ப் போனான்.

கால நீரோட்டத்தில் ஒரு திவலையாய் அவன் வாழ்வும் ஓடும்போது - ஒரு பிரளயமாய் சம்பவங்கள் நிகழத் தொடங்கின. ஒழுங்கைகளில் இராணுவ ட்றக்குகள் ஓடத்தொடங்கின. எங்கெங்கிருந்தோ எல்லாம் இளைஞர்கள் திரண்டார்கள். வெடிச் சத்தங்கள் கேட்கத்தொடங்கின. மூட்டை முடிச்சுகளுடன் மக்கள் அகதிகளாய் இடம்பெயர்ந்தார்கள். விமானங்கள் குண்டுகளை வீசித் தள்ளின; எமது மண்ணில் அகால மரணங்கள் அதிகரித்தன; அங்கவீனர்கள் பெருகினார்கள். வாழ்வே சாவுக்கான எதிர்பார்ப்பு என்பதாய் மாறிப் போனது.

எங்கெங்கிருந்தெல்லாமோ இளைஞர்கள் ஆண்களும் - பெண்களுமாக முளைத்தெழுந்தார்கள். அவர்கள் அணி திரண்டு போர்ப்பயிற்சி பெற்றார்கள். எமது மண்ணில் காற்றடம் பதித்த எதிரியை கலைக்க முனைந்தார்கள்; விழுப்புண் பெற்றார்கள்; மாவீரர் ஆனார்கள். மீண்டும்...மீண்டும் .. இளையவர்கள் முளைத்தார்கள்.

மாபெரும் தியாகம் - தம்மை ஆகுதியாக்கிடும் தியாகம், எதிரியிடமிருந்து எமது மண்ணை விடுவிக்கும் போரில் ...தம்மையே அர்ப்பணிக்கும் எல்லை காணமுடியாத தியாகம்......

அவனின் பூமி விடுதலை பெறும். அவன் பிறந்த மண்ணிலிருந்து எதிரிகள் அகற்றப்படுவார்கள். பாடசாலை நாட்களில் அவன் திரிந்த இடங்களில் எல்லாம் சுதந்திரக் கொடி பறக்கும். அகதிகளாய் ஆனவர்கள் மீண்டும் தமது மண்ணுக்குத் திரும்புவார்கள். பழையபடியே அர்த்தமுள்ள வாழ்வின் உயிர்த்துடிப்பின் சலனங்கள் எழும்பும்.

செல்வராசா உற்சாகம் மிக்கவனானான். தனித்த வாழ்வின் சோகங்களை மறந்து இயங்கத் தொடங்கினான். கதைகள், கவிதைகள், கட்டுரைகளென எழுதத் தொடங்கினான்.

*இனிக்கும் உம்உயிரை*
*அர்ப்பணிக்கத் துணிந்துவிட்ட*
*எம்மண்ணின் புதல்வர்களே!*
*உம்மை நினைக்கையிலே-*
*கல்லும் கசிந்துருகும்;*
*காற்றும் நின்றசையும்;*
*வான வெளியும்*
*ஒளிப்பொட்டாய் நீர் சிந்தும்*
*எம்மினிய*
*புதல்வர்களே!*
*எம்மனமோ*
*எரிமலையாய் குமுறியெழும்*

ஆனால் மனிதர்களை நினைக்கும் போது, செல்வராசா அமைதியின்றித் தவித்தான். இந்த மண்ணில் நிகழும் மகத்தான நிகழ்வுகளைப் புரியாதவர்களாய் - சுயநலத்தை மட்டுமே சிந்திப்பவர்களாய் — சாதாரணமானவர்களாய்... வேஷதாரிகளாய் -பேச்சொன்றும் செயலொன்றுமாய் வாழ்பவர்களாய்......

செல்வராசா செல்வராசாவாகவே இருக்க முயன்றான். □□




# விரைவாய் - விரைவாய் தோழி

□

என். சண்முகலிங்கன்

கூண்டுக்குள்ளே
குந்தியிருந்து
அழுவது எத்தனை காலம்...

வெளியே உலகம்
விரியும் அழகை
அறியாதவளா இனியும்...

வளரும் சிறகை
விரிக்கும் வேகம்
விரைவாய் விரைவாய் தோழி

சிறைகள் உடையும்
சிந்தை குளிரும்
சீராய் நிமிர்வாய் தோழி

மூடும் கனவும்
முன்னைச் சுமையும்
மூழும் படியாய் வருவாய் - நான்

தேடும் புதுமை
பெண் நீ எனவே
தெளியும் தரிசனம் தருவாய்

அறிவில் தெளிவு
ஆற்றல் - துணிவு
ஆண் - பெண் இணையாய் உறவு

யார்க்கும் அடிமை
இல்லா வாழ்வின்
அர்த்தம் பெரிதென் தோழி

வளரும் சிறகை
விரிக்கும் வேகம்
விரைவாய் விரைவாய் தோழி!




சமூக வரலாற்று வளர்ச்சியில் உடல் உழைப்பு, உள உழைப்பு என்ற வாறான தொழிற்பிரிவுகள் ஏற்படத் தொடங்கின. அதிக அளவிலே மூளையை உட்படுத்தும் தொழிற்பாடுகள் உள உழைப்பு எனப்பட்டது. உள உழைப்பின் மேம்பாட்டுடன் தூய சங்கீதம், *(absolute music)* அல்லது சாகித்தியம் என்ற இசை வளர்ச்சியடையத் தொடங்கியது. நாட்டார் பாடல்களும், நாட்டார் இசையும் உடல் உழைப்போடு நேரடியாகத் தொடர்பு கொண்டவை. உள உழைப்பில் ஈடுபடுவோர் சமூக அடுக்கமைப்பில் உயர் வடையத் தொடங்க, நாட்டார் பாடல்களும், இசைவகைகளும் ஒருவகையிலே தாழ்ந்தவை என்ற நிலையும் ஏற்படலாயிற்று. (ஆனால் அவற்றிலே பொதிந்திருந்த ஆளுமைக் கோலங்களை இசைவல்லாளர் கண்டறியத்தவறவில்லை.)

நாகசுரம், தவில் என்பவை உடல் உழைப்போரின் பண்பாட்டுடன் கூடிய தொடர்பு கொண்டு வளர்ந்தமையால், நாட்டார் பாடல்களையும், தேவாரங்களையும், திருவாசகங்களையும், ஆழ்வார் பாசுரங்களையும் தமது இசைத் தொடர்பியலிலே பயன்படுத்தின. இவற்றின் பின்புலத்திலேதான் கருநாடக உருப்படிகள் நாகசுர இசை, இசையை வளம்படுத்த உதவின. ஒவ்வொரு இராகங்களினதும் முழுமையான ஆளுமையை வெளிப்படுத்த தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகள் தவிர்க்க முடியாத ஊடகங்களாகின்றன. பிறதுளைக் கருவிகள் அல்லது காற்று வாத்தியங்கள் என்பவை தூய கருவி வடிவங்களிலே முற்றிலும் சார்ந்திருக்கும் "வாத்தியப்பிரபந்த" நிலையில் தொழிற்பட, நாகசுரம் அவ்வாறு கட்டுப்பட்டிராமை ஒரு சிறப்புப்பண்பாகச் சுட்டிக்காட்டத்தக்கது.

# தவில், நாகசுர இசை வடிவங்கள்

## — ஒரு மீளாய்வு —

சபா. ஜெயராசா

சமூகத்தின் பன்முகப்பரிமாணம் கொண்ட வளர்ச்சிக்கும், பன்முகப்பட்ட இசைவடிவங்களின் படிமலர்ச்சிக்குமிடையே ஒப்புமைகளைக்காண முடியும். கிருதி, இராகமாலிகை, மணிப்பிரவாள கிருதி, பதம், ஜாவலி, தில்லானா, ஜதிஸ்வரம், வர்ணம் போன்ற பல்வேறு இசைவடிவங்கள் படிமலர்ச்சியடைந்தன. பல்வேறு இராகங்களையும் கோவைப்படுத்திக் கதம்பமாக்கி இராகமாலிகையை நாதசுரத்தில் வாசிக்கும் போது, ஒரு வடிவத்தினூடாகப் பலரைத் திருப்திப்படுத்த முடியும். திருவொற்றியூர் தியாகராயர், பதினாறு இராகங்களை உள்ளடக்கிய ''ஸ்ரீ ரமணபத்ம நயனா'' என்று தொடங்கும் இராகமாலிகையைப் புனைந்தார். தற்காலத்தில் ''ஜெய ஜெய கோகுல பாலா'' என்ற இராகமாலிகை நாகசுர வித்துவான்களிடையே புகழ் பெற்றுள்ளது.

பல்வேறு மொழி பேசுவோரையும் ஏக காலத்திலே இசைவாயிலாகத் திருப்தி செய்ய வேண்டிய தேவை, இசைவளர்ச்சியிலே தவிர்க்க முடியாத பண்பு. இந்தப் பரிமாணம் ''மணிப்பிரவாள'' கிருதிகளினால் ஓரளவு நிறைவேற்றி வைக்கப்படத்தக்கதாயுள்ளது. முனுஸ்வாமி தீக்ஷதர் 'வேங்கடாசலபதே' என்ற காபி இராகக் கீர்த்தனையை சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கலந்து எழுதினார். ஸ்ரீதியாகராஜராலும் இவ்வாறான இசை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமூகத் தொடர்பியலின் வழியாக எழுந்த இசைவடிவமாக 'பதம்' விளங்குகின்றது. ஒருவர் கூறுவதை மற்றவர் புரிந்து கொள்ளல் ஒரு வழிச்செயல்முறை எனப்படும். இங்கு கருத்துப்பாய்ச்சலானது, ஒருவரிடமிருந்து மற்றவருக்குச் செல்லுமேயன்றி இருபக்கமாக நிகழ மாட்டாது. இருவரும் கலந்து ஒருவரோடு மற்றவர் கருத்துப் பரிமாற்றம் செய்வது இருபக்கச் செயல் முறை எனப்படும். இசையில் ஒரு வழிச் செயல் முறை தழுவிய வடிவமாகத் தோன்றியதே 'பதம்' ஆகும். மதுரபக்தி அல்லது நாயகன் - நாயகி பாவத்தில் ஒரு வழிச் செயல் முறையில் உணர்ச்சிகள் எடுத்துக்கூறப்படும். இவையே 'பதம்' என்ற இசைவடிவம் தோன்றுவதற்குப் பின்புலமாக அமைந்தன. கானம் கிருஷ்ணையருடைய பதங்கள் தமிழ் மொழியிலே சிறப்புப் பெற்றவையாகக் கருதப்படுகின்றன. நாகசுரத்திற் காட்டிலும், பரத நாட்டியத்திலே 'பதம்' சிறப்புப் பெறுவதற்கு நாயகன் - நாயகி பாவ ஒரு பக்கத்தொடர்புப் பரிமாணமே, வலிதான காரணமாகவுள்ளது.

தில்லானா என்ற இசைவடிவமும் நாகசுரக்கலையின் வளர்ச்சிக்கு உதவியமைக்கு சமூகக்காரணிகளே அடிப்படையாகவுள்ளன. பொருளாதார உற்பத்திப் பெருக்கத்துக்கு விரைந்து தொழிற்படுதலும், தசைநார்களைக் கட்டுப்படுத்தலும் சிறப்பார்ந்த பண்புகளாகவுள்ளன என்பதை முன்னர் குறிப்பிட்டோம். இசைக்கும் பொருளாதார உற்பத்திக்குமிடையேயுள்ள உறவு தொன்மையானதாக இருப்பினும், இந்த இயக்கத்தின் தனித்துவங்களை எடுத்துக் காட்டும் வடிவங்கள் காலத்துக்குக் காலம் பளிச்சீடுகளாக வெளிவருதல் உண்டு.

இவ்வகையிலே தோன்றிய ஒரு இசை வடிவமாக அமைவதே தில்லானா. பதினெட்டாம் நூற்றாண்டளவில் இந்த வடிவம் தனித்துவமாக எழத் தொடங்கியது. பரதநாட்டியம், நாகசுரம் முதலிய ஆற்றுகைக் கலைகள் தில்லானாவை தமது ஆற்றுகையின் பிரதான பகுதியாகச் சேர்த்துக் கொண்டுள்ளன.

கல்வி முறைமைக்கும் தவில், நாகசுரம் என்பவற்றுக்குமான தொடர்புகளை ஆராயும் பொழுது, இருவகை நெறி முறைகளி

னூடாக இவற்றைப் பயில்வோர் முன்னேறி வரவேண்டியுள்ளது. முதலாவது நெறிமுறை பொதுக்கல்வியாகவும், மற்றையது சிறப்புக்கல்வியாகவும் அமையும். பொதுக்கல்வியானது, திண்ணைப் பள்ளிக்கூடங்கள் வாயிலாக முன்னர் பெறப்பட்டது. தற்காலத்தில் அவற்றின் இடத்தைப் பாடசாலைகள் பெற்றுள்ளன. தவில் - நாகசுரம் தொடர்பான வரன்முறையான கல்வியை, குரு குல முறையிற் கற்றுக்கொள்ளும் பாரம்பரியமான சிறப்புக்கல்வி இன்றும் காணப்படுகின்றது. குருகுலக்கல்வியே தொழிலோடு நேரடியாகத் தொடர்புடையதாகையால் அதிற் கூடிய கவனத்தைச் செலுத்தும் பொழுது பொதுக்கல்வியிலே பின்னடைவு ஏற்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.

குருகுலக்கல்வியிற் தவில், நாகசுரம் என்பனவற்றின் சாஸ்திரமும் சாதனையும் கற்பிக்கப்படும் 'தன்மயமாக்கல்', 'தன்னமைவாக்கல்' என்ற இரண்டு முறைகளாலும் மாணவர் தவில், நாகசுர எண்ணக் கருக்களைக் கற்றுக் கொள்வர்.

தெரிந்தவற்றை மீளச் செய்யும் தொழிற்பாட்டுடன் இணைந்ததே 'தன்மயமாக்கல்'. தாம் முன்னர் அறிந்திராத ஒரு சாஸ்திரத்தை அல்லது சாதனையைக் கற்றுக்கொள்வது 'தன்னமைவாக்கல்' என்ற உளச்செயல் முறையாற் குறிப்பிடப்படும்.

மனனம் செய்வதன் வாயிலாகக் கற்பித்தல், இசைக் குருகுலங்களின் சிறப்பான முறையியலாகக் கருதப்படுகின்றது. ஏட்டிலே பதிவு செய்துவைக்கப்படாது, வாய்மொழியாக எடுத்துக் கூறுதலும், மீட்டுக் கூறுதலுமே குருகுலங்களிலே பெரும்பாலும் பின்பற்றப்பட்டமையினால் பொருத்தமான இசை வரலாற்றுச் சான்றுகளைப் பெறுவதிலே இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன.

இசை என்பது செவிப்புலனுக்குரிய ஒரு தொடர்பு வடிவம். அதனை எழுத்து வடிவிலே கட்புல வடிவமாக மாற்றும் பொழுது அதன் 'சுத்தம்' மாறுபட்டுவிடலாம் என்ற நம்பிக்கையும் நிலவிவந்தது. செவிவழித் தொடர்பியலும் வாய் மொழிப்பாரம்பரியமும் இயல்பாக ஒன்றிணைந்து செயற்பட்டன. அச்சு வடிவிலான தொடர்பியல் வளர்ச்சியானது, இசையியலிலே பல்வேறு பரிமாணங்களை ஏற்படுத்தியது. இசையை எழுதுவதற்குரிய வரிவடிவங்களைத் தேடும் முயற்சியினை அது மேலும் தூண்டியது.

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் தமிழக சமூக நிலையும், ஆங்கில மொழிவாயிலான செல்வாக்குகளும் தவில், நாகசுர ஆற்றுகைகளிலே மேலும் பரிமாணங்களை ஏற்படுத்தின. அருணாசலக் கவிராயர் மேற்கொண்ட இசைநாடக எழுத்தாக்க முயற்சிகள் நாகசுரக்கலையிற் செல்வாக்குச் செலுத்தின. அருணாசலக் கவிராயர் எழுதிய இராமநாடகப் பாடல்களுக்கு கோதண்டராமையரும், வேங்கடராமையரும் இசையமைத்தனர். தமிழ் இசை வரலாற்றிலே இது ஒரு பிரதான வளர்ச்சி முனையாகும். கலைகளில் ஏற்பட்ட தொழிற்பிரிவின் வளர்ச்சியை இது சுட்டிக் காட்டுகின்றது. திரையிசையில் இது மேலும் விரிவடையத் தொடங்கியது.

கோபாலகிருஷ்ணபாரதியார் எழுதிய நந்தனார் சரித்திரமும் இசைகலந்த வடிவமாக அமைக்கப்பட்டது. இந்த வடிவத்தினூடாக கிராமிய இசைகள் பல புதுவிசைகளைப் பெற்றன. காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து போன்ற இசை வடிவங்கள் நாகசுரத்தில் மிகச் சிறப்பாக எடுத்தாளப்பட்டன. உடலசைவுகளையும் தசைநார் அசைவுகளையும் மிக நுட்பமாகப் புலப்படுத்தும் தாளக் காவடியாட்டங்கள் தவில் எழுப்பும் ஒலி அட்சரங்களுடன் பின்னிப் பிணைந்தன.

அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களினூடே கிராமிய இசைவகைகள் புது விசைகளைப் பெறுதல் போன்று, சாஸ்திரிய இசை வகைகளிலும் புதிய அனுபவங்கள் ஒன்றிணைக்கப்படுதல் உண்டு. வேங்கட சுப்பையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், தச்சூர் சிங்காரவேலு பல்லவி ஷேசையர், திருவெற்றியூர் தியாகையர் ஆகியோர் சாஸ்திரிய இசைவகைகளிலே புதிய வடிவங்களை அறிமுகம் செய்யலாயினர். குதூகலம், கதனகுதூகலம், மல்லிகாவசந்தம், ஹம்சகிரி, லோகரஞ்சனி, ஹம்சநாராயணி போன்ற புதிய இராகங்களைப் பயன்படுத்தும் கிருதிகள் அறிமுகம் செய்யப்பட்டன. நாகசுரக்கச்சேரிகளில் இவை இசையழகாக்கப் பெற்றன.

கவிக்குஞ்சரபாரதி, இராமசாமி சிவன், ஆனந்தபாரதி, நீலகண்டசிவன், வைத்தீஸ்வரன் கோவில் சுப்பராம ஐயர், சிதம்பர பாரதி, அச்சுததாஸர், இராமலிங்க சுவாமிகள், பாரதியார் போன்றோரது பாடல்கள் நாகசுரக் கச்சேரிகளிற் பயன்படுத்தப்படலாயின. நாட்டார் இசைமரபுகளுக்குரிய பாலமாக மேற்கூறிய கவிஞர்களின் ஆக்கங்கள் அமைந்தமையால் மக்கள் மத்தியிலே பலம் பொருந்திய இசைக்கருவியாக விளங்கிய நாகசுரத்துடன் அவை இசைவாக இணைக்கப்படலாயின.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் தவில் - நாகசுரம் என்பவற்றின் இசை வடிவான சமூக உறவாடல், மேலும் பலப்பட்டது. பாரதியாரின் பாடல்கள் நாகசுரத்திலே பெருமளவில் எடுத்தாளப்பட்டன. மக்கள் மத்தியிற் பாரதியாரின் பாடல்களைப் பரப்புவதில் நாகசுரம் பெரும் பங்கெடுத்தது.

திரைப்படத்தின் வளர்ச்சியும், நாகசுரத்தின் வளர்ச்சியும் ஒன்றன் மீது மற்றையது செல்வாக்குச் செலுத்தத் தொடங்கின. தமிழிலே தயாரிக்கப்பட்ட எந்த ஒரு கலைத்திரைப்படமும் தவில் -நாகசுரத்தைக் கைவிட முடியாமலிருந்தமை அவற்றின் கலைப் பெறுமானத்தையும், மக்களிடத்து வேரூன்றியிருந்த ஆற்றல்களையும் வெளிப்படுத்துகின்றன. திருமணம் என்பது, தமிழ்த் திரைப்படங்களின் தவிர்க்கமுடியாத சித்திரிப்பு அலகாக விளங்க, அதனை வெளிப்படுத்தும் ஒலிக்குறியீடாக தவில் - நாகசுர இசைகளைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. இசைத்தட்டுகளைப் பதிப்பிக்கும் முயற்சி வளர்ச்சிபெறத் தொடங்க அது இலாபகரமான தொழிலாக மாற்றப்படுவதற்கு மக்கள் விரும்பும் இசைவகைகளைப் பதிப்பிக்க வேண்டியிருந்தது. வித்துவான் இராஜரத்தினம்பிள்ளை, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், குளிக்கரைப்பிச்சையப்பா, காருகுறிச்சி அருணாசலம் போன்றோரது இசைவார்ப்புக்கள் இசைத்தட்டுக்களிலே பதிவு செய்யப்பட்டன. சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள், மங்கள இசையோடு தமது நாளாந்த நிகழ்ச்சிகளைத் தொடங்கும் மரபு வளர்ச்சியடையத் தொடங்கியது.

நிலமானிய சமூக அமைப்பின் சேவைகளில் ஒன்றாக விளங்கிய நாகசுரம், அந்த அமைப்புக்குரிய எதிர்மறைத்தாக்கங்களையும் அனுபவித்துவரலாயிற்று. தவில் - நாகசுரவித்துவான்கள் தமது உடற்பலம் குன்றிய முதுமை வாழ்க்கையில் இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள நேர்ந்தது. நிலமானிய சமூக அமைப்பில் உற்பத்திக்காரணியாகிய நிலத்தைச் சொந்தமாக வைத்திருந்தோரே சமூக அடுக்கமைப்பின் உயர் நிலையில் இருந்ததுடன் ஏனையோரைக் கட்டுப்படுத்தும் சமூக ஆற்றலும் அவர்களிடமே குவிந்திருந்தது. இந்நிலைக்கு இசைக்கலைஞர்கள் விதிவிலக்கற்றோராக இருக்க முடியவில்லை. உற்பத்திமுறையும் சமூக அடுக்கமைப்பும் ஒன்றிணைந்த முறையிலே தாக்

கங்களை ஏற்படுத்தின. இந்நிலையில் சில வித்துவான்கள் தாம்பிரியமாக வாசிக்கும் இராகங்களை அடகுவைத்தமைக்கும் சான்றுகள் உள்ளன. *(Prof P. Sambamoorthy — 1982)*

சமூக நிறுவனங்களின் வளர்ச்சியும், நிறுவனங்களுடாகக் கருத்துக்களைப் புலப்படுத்தலும், வலுப்படுத்தலும் வளர்ச்சியடைந்தமை தவில் - நாகசுரக் கலைவளர்ச்சியின் மீதும் செல்வாக்குகளைப் பதித்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள், சென்னகேசவப் பெருமாள் ஆலயத்திலே ஓர் அறக்கொடையை அமைத்து சிறந்த நாகசுர வித்துவான்களுக்குப் பரிசில்வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தினார். பெரியாழ்வார் தினத்தோடு இணைந்ததாகப் பத்துநாட்களுக்கு நாகசுர இசை விழா நடைபெறும். வித்துவான்கள் தமக்குப் பிரியமான ஓர் இராகத்தைத் தெரிந்தெடுத்து இரண்டு மணித்தியாலங்களுக்கு வாசிக்கும்படி கேட்கப்பட்டனர். மன்னார்குடி சின்னப் பக்கிரி, செம்மனார் கோவில் இராமசாமி, மதுரை பொன்னுசாமி, தஞ்சாவூர் சிவக்கொழுந்து, திருவிடமருதூர் விருசாமி முதலிய வித்துவான்கள் இதன் வழியாக விருதுகளைப் பெற்றனர்.

தமிழ் நாட்டிலே பயிர்ச் செழிப்புமிக்க புலங்களுள் ஒன்றாக தஞ்சாவூர் விளங்குகின்றது. அளவெட்டி, இணுவில் முதலிய கிராமங்களில் வாழும் தவில், நாகசுர வித்துவான்களுக்கும் தஞ்சாவூர் வித்துவான்களுக்குமிடையே பண்பாட்டுத் தொடர்புகள் உண்டு. பயிர்ச் செய்கையைப் பொறுத்தவரையிற் கூட இப்பிரதேசங்களுக்கிடையே ஒரு வித இணைப்பைக் காணமுடியும். வித்துவான்களிடையே பயிற்சிப்பரிவர்த்தனையும் யாழ்ப்பாணத்துக்கும் தஞ்சாவூருக்குமிடையே நிகழ்ந்து வந்துள்ளது. தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகூர், நாகப்பட்டினம் முதலிய இடங்களில் வாழ்ந்த நாகர் என்போர் வாசித்த இசைக் கருவியே, நாகசுரம் என்றவாறு நாக வழிபாட்டோடு இதனைத் தொடர்புபடுத்துதல், நாட்டார்மரபுகளோடு கொண்ட உறவின் இறுக்கத்தைக் காட்டுகின்றது. பதினேழாம் நூற்றாண்டில் எழுதப் பெற்ற 'பரத சங்கிரகம்' என்ற நூலில் 'நாகசுரம்' என்ற சொல் பயன்படுத்தப்படுதலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"பூரிகை நாகசுரம் பொற்சின்னம்
எக்காளை
தாரை நவரி சங்கு வாய்வீணை—
வீரியஞ்சேர்
கொம்பு தித்தி காளை குழலுடன் ஈராறும்
இன்பார் துளைக்கருவி என்"

நாகசுரமும், தவிலும் மக்களின் உணர்வுகளுடன் ஆழ்ந்து வேரூன்றியமைக்குக் காரணம், அவை சமூக அமைப்பின் உற்பத்தி முறைமையோடு இடையுறவு கொண்டிருந்தமையாகும். □□

**'வெளிச்சம்'** — புரட்டாதி மாத இதழ், இரண்டாவது ஆண்டு மலராக அதிக பக்கங்களுடன் வெளிவரவுள்ளது. கலை, இலக்கியப்படைப்பாளிகள் தங்களது படைப்புகளை எழுதி அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும். படைப்புக்கள் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பனவாக இருப்பது விரும்பத்தக்கது.

— ஆசிரியர் குழு

இருள் படர்ந்து
பகையுள்
புதையுண்டு போனது என் கிராமம்.
நினைக்க... நினைக்க - என்னுள்
நெருப்பெரிகிறது.
மறக்கமுடியவில்லை - அந்த
மறைந்துபோன நாட்களை...

வயல் வரம்புகளைக் காணவில்லை
எங்கே?... எங்கே?... நான்
ஓடிப்பிடித்து விளையாடிய
ஒடுக்கமான வயல் வரம்புகள் எங்கே? ..
ஒடுக்குமுறையாளரின்... டாங்கிகளுள்
சிக்குண்டு... சிதறிப்போனதோ...




# என்னுயிர் மண்

☐

அடம்பனூர் செ. திருமாறன்

வயலில் நின்ற அப்பாவுக்கு - நான்
பழங்கஞ்சி கொண்டு
பறந்துபோன பாதையெங்கே?...
பாழாய்ப்போனவரின்
பாசறைக் காவலரண்கள்... ஆ!...
பார்த்துத் துடிக்கிறேன்...

தேர் சுற்றி
தேங்காய் உடைத்துண்ட - அந்தச்
சிவன் கோயில் எங்கே?...
பறந்து போன - அந்த
பசுமையான நாட்களை மீண்டும்
பார்ப்பது எப்போது...

அம்மா அடிக்க நான்
ஓடிய அந்த
ஆட்டுப் பட்டியும், ஆலமரமும்தான்
எங்கே?...
மருத மரமேறி மல்லாந்து
வீழ்ந்து... நான்
துள்ளிக் குதித்து நீந்திய - அந்த
நீர்த்தடாகம் தான் எங்கே?...
என்னை எனக்குள்
இருத்திட முடியவில்லை...

குஞ்சிலிருந்து நான்...
குடியிருந்த... என் குடிமனை
எங்கே? .. தேடின... என்கண்கள்
தெரியவில்லை... அந்த இடம்
தெளிவாய்த் தெரியவில்லை...
கிட்டப் போகிறேன்...

வெற்றிடம்... என்
வீடிருந்த இடம்...
வெறிச்சோடி வெட்டவெளியாகிக் கிடக்கிறது...
திட்டியாய் மணல் குவித்து
குட்டித் தங்கையுடன் நான்
குலவியிருந்த நாட்கள்...
எப்போதுவரும்?... எரிகிறது நெஞ்சு...

இருளில் இருந்து நான்
எதிரியை நோட்டமிட்டேன்
என்னூரையும் பார்த்துவிட்டேன்...
ஏ. கே 47....தோளில் தொங்க
பற்றைக் காடுகளால் - என்
சிற்றூருக்குள்...நுழைந்துவிட்டேன்...
முன்னிருட்டு நேரம்...
இருள் விலகி நிலா பதுங்கிவரும் பொழுது...
என் இடம் சேர வேண்டும்.

பற்றைகளால் - என்
சிற்றூருக்குள் சென்றதையெண்ண
வெந்து போகுதுள்ளம்...
பட்டப் பகலில்...நான்
பாதையினால் போகும் காலம்
அதோ! ... அதோ!...
மிக அண்மையில்தெரிகிறது...

வண்ணார்பண்ணை கிளை நூலக
மா நகர சபை
யாழ்ப்பாணம்

# புயலாக மாறும் பிஞ்சுகள்

□

**மலரன்னை**

யன்னலினூடாகப் புகுந்த மாலை வெயிலின் உறைப்பு. எண்ணங்களை அலைய விட்டபடி தையல் வேலையில் மூழ்கிப் போயிருந்த மைதிலி, தன் நிலைக்குத் திரும்பினாள்.

"நேரத்தோடை போனால்தான் கடைகள் பூட்டமுந்தித் தையலுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு வந்திடலாம். பொங்கலுக்கு இன்னும் மூண்டு நாள்தானே கிடக்கு. அதுக்கிடையிலை கிடக்கிற சட்டையள் எல்லாம் தைச்சு முடிக்கவேணும். எல்லாரும் பொங்கலுக்குப் போகவேணும் எண்டு சொல்லித்தான் தைக்கத் தந்தவை"

தனக்குள் சொல்லியபடி மைதிலி தையல் மெசினை மூடிவிட்டு எழுந்தாள்.

"அம்மா என்னையும் கூட்டிக் கொண்டு போறீங்களே, கடைக்கு" என்றாள், தர்சினி.




"இல்லைக் குஞ்சு, நீங்கள் பக்கத்து வீட்டு வாணி அக்காவோடை விளையாடிக் கொண்டிருங்கோ. நான் டக்கெண்டு போயிட்டு வந்திடுறன். பிள்ளைக்குச் சொக்கா வாங்கிக் கொண்டு வாறன்" என்று சொல்லிக்கொண்டு அவசரமாகப் புறப்பட்ட மைதிலி, தர்சினியைப் பக்கத்து வீட்டில் விட்டுவிட்டு, ஒழுங்கையில் இறங்கி விறுவிறென்று நடந்தாள். பொழுது சரிவதற்குள் தண்ணீரூற்றுக்குப் போய்த் திரும்பிவிட வேண்டுமென்ற அவசரம் அவளுக்கு.

தர்சினியும் வாணியும் 'பில்டிங் புளொக்ஸ்' ஸைப் பரப்பி, பல விதமான உருவ அமைப்புக்களைச் செய்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

இருந்தாற்போல் வாணிக்கு வற்றாப்பளைப் பொங்கல் ஞாபகம் வரவே, 'தர்சினி அம்மாட்டைக் கேட்டிட்டுப் பொங்கலுக்குப் போறதுக்கு நீர் எங்களோடை வாருமன், எங்கட மெசினிலை போகலாம். கனபேர் வருவினம், எங்கட மெசினிலை போறதுக்கு. உங்கட அம்மாதான் கோயிலுக்குப் போறதில்லையே"

ஆறு வயது நிரம்பிய தர்சினி; சொன்னாள். "அம்மா சொன்னவா, அப்பாவும், அண்ணாவும் சாமியிட்டைப் போட்டினமாம். அதால அவையைத் தான் கும்பிட வேணுமாம். நாங்கள் ஒவ்வொரு நாளும் அவையின்ரை படத்துக்குத் தான் பூவைச்சு, குத்து விளக்குக் கொளுத்திக் கும்பிடுற நாங்கள்"

இதைக் கேட்டுக் கொண்டிருந்த வாணியின் அம்மம்மா, "எடி விசரி, அவளைக் கோயிலுக்கு ஏன் கூப்பிடுறாய்? போன வரு

சம் பொங்கலுக்கு எண்டு, போய்த்தானே மைதிலி புருசனையும், புள்ளையையும் பறிகொடுத்தவள். பாவம்! ...அவளுக்கு இந்த முறை கோயிலுக்குப் போக மனம் வருமே?''

தர்சினி குறுக்கிட்டாள். ''அம்மம்மா, அப்பாவும் அண்ணாவும் இந்தப் பொங்கலுக்கு வந்திடுவினமே; சாமி இனி விட்டிடுவரே''

வாணியின் அம்மம்மாவின் நிலை தர்மசங்கடமாகியது.

''பிள்ளை தர்சினி, உன்ரை அப்பாவும், அண்ணாவும் செத்துப் போட்டிடினம். செத்தவை திரும்பி வரமாட்டினம். இது தெரியாதே உனக்கு''

தர்சினி வெடுக்கென்று கேட்டாள்.

''ஏன் அம்மம்மா பொய் சொல்லுறியள். அப்பாவும் அண்ணாவும் சாமியிட்டைத் தானே போனவை. முந்தி, நீங்கள் தானே என்னைத் தூக்கிக் காட்டின நீங்கள். அப்பா, சாமி மாதிரி கண்ணை மூடிக் கொண்டு இருந்தவர். மாலையள் எல்லாம் போட்டு சாமியைத் தூக்கிற மாதிரித்தானே தூக்கிக் கொண்டு போனவை. எல்லாருந்தானே சொன்னவை அப்பா சாமியிட்டைப் போட்டார் எண்டு''

''எடி பிள்ளை; நான் என்னெண்டு உனக்கு விளங்கப்படுத்துறது. போன வருசம் பொங்கலுக்கு, அப்பாவும் நீங்களும் போன நீங்களெல்லோ''

''ஓம் அம்மம்மா, போனநாங்கள்''

''அப்பத்தான் ஆமிக்காரன் காம்பிலை இருந்து ஷெல் அடிச்சவன். சனக் கூட்டத்துக்கை ஷெல் விழுந்து கனசனம் செத்துப் போச்சுதுகள். அதிலை கொப்பரும் கொண்ணையும் செத்துப் போச்சினமடி''

''அம்மம்மா ஷெல் எண்டால் என்ன? நாங்கள் கோயிலுக்கு வெளியாலை நிக்கைக்க இடி முழக்கம் கேட்டுது. நான் பயத்தில கண்ணை இறுக்கி மூடிட்டன்''

''எடி பிள்ளை. உன்னைத் தூக்கி எறிஞ்சுபோட்டுது. நீ மயங்கிப் போனாய். கனபேர் ரெத்த வெள்ளத்துக்க கிடந்தவை. எக்கச்சக்கமான ஆக்கள் காயப்பட்டு அதுக்கை கிடந்தவை. அதிலைதான் கொம்மாவுக்கும், கையிலை காயம் பட்டு மூண்டு விரல் இல்லாமல் போட்டுது. கொம்மாவின்ர கையைப் பாத்தனியல்லோ, எல்லா விரலும் இருக்குதோ?''

''அம்மம்மா, நீங்கள் சொல்லுறது சரிதான். எண்டாலும் நீங்களும் எனக்குப் பொய்தானே சொல்லிப் போட்டியள், அப்பா சாமியிட்டைப் போட்டாரெண்டு''

''நீ சின்னப்பிள்ளை. பயந்திடுவாய் எண்டுதான் அப்பிடிச் சொன்னது''

''அம்மம்மா, அப்ப எங்கட அப்பாவும் அண்ணாவும் வரமாட்டினமோ''

இலேசான சிணுக்கத்துடன் கேட்டாள் தர்சினி.

''என்னெண்டு பிள்ளை வாறது. செத்தால் செத்ததுதான். பிறகு வர ஏலாது''

அம்மம்மாவிற்குப் பெரியதொரு உண்மையை அந்தப் பிஞ்சு நெஞ்சத்திற்கு உணர வைத்துவிட்ட பெருமை.

''தர்சினி! தர்சினி!!'', மைதிலி தண்ணீரூற்றுக்குப் போய்த் திரும்பி விட்ட அறிகுறி.

''வாறன் அம்மா'' என்று கூவியபடி ஓடினாள் தர்சினி. அம்மா, அன்போடு வாங்கி வந்து கொடுத்த சொக்லேட் அவளுக்குச் சுவைக்கவில்லை; அம்மம்மா புரிய வைத்த உண்மை

சுவையை மழுப்பிவிட்டது. இரவு சாப்பிடும்போது தர்சினி அம்மாவிடம் கேட்டாள்.

''அம்மா காம்பிலையோ ஆமிக்காரர் இருப்பினம்? ஏன் அம்மா ஷெல் அடிக்கிறவை? ஆக்களைக் கொல்லவோ?''

திடுக்கிட்டாள் மைதிலி.

''தர்சினி, ஆர் சொன்னது உதெல்லாம்?''

''வாணியின்ரை அம்மம்மாதான் சொன்னவ. எனக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு. அப்பாவும், அண்ணாவும் இனி வரமாட்டினம். நீங்கள் பொய் சொல்லிப் போட்டியள்.''

அம்மாவின் முகத்தைப் பார்த்த தர்சினி துணுக்குற்றாள். கண்ணீர் அருவியாய் வழிந்தோட - குரல் தழுதழுக்க - மைதிலி தன் மகளை இறுக அணைத்துக் கொண்டாள்.

□ □ □

அன்று வைகாசிப் பொங்கல் நாள். ஊரே அமளிப்பட்டது. மைதிலிக்கு மனமே சரியில்லை. அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கடந்த வருட நிகழ்வுகள் நினைவில் நிழலாடின.

வீட்டில் எல்லோருக்கும் கணவன் புது உடுப்புகள் வாங்கி வந்தது; எல்லோரும் தடபுடலாய் வெளிக்கிட்டுக் கோயிலுக்குப் போனது; பிறகு தான் மயக்கம் தெளிந்து விழித்த போது யாழ். போதனா வைத்தியசாலையில் கையில் கட்டுப் போட்ட நிலையில் கிடந்தது; தனது கணவன் பிள்ளையின் சடலங்களைக் கூடக் காணக்கிடைக்காமற் போனது; தனது ஒரே பற்றுக்கோடாகிய மகள் தர்சினியை வளர்த்து ஆளாக்கி விடவேண்டுமெனத்தான் திடசங்கற்பம் பூண்டது; தன் எண்ணங்களை, கணவனையும், மகனையுமே நினைத்து நினைத்து அலையவிடாமல் ஒரு நிலைப்படுத்தத் தனக்குத்தெரிந்த தையற்கலையைத் தேர்ந்தெடுத்தது - என்று எல்லாவற்றையும் அசைபோட்ட வண்ணம் அமர்ந்திருந்தாள்.

அப்பொழுது ''அம்மா, அண்ணா இனி வரமாட்டானெல்லே. அவன் விளையாடுற 'ஆமிசெற்'றை அலுமாரிக்குள்ள வைச்சிருக்கிறீர்கள். அதை எடுத்து தாங்கோம்மா, நான் விளையாடப்போறன்'' என்று கெஞ்சினாள் தர்சினி.

பிஞ்சு உள்ளத்தை நோகவிடக் கூடாது என்ற நோக்குடன்,அலுமாரியைத் திறந்து அதைத் தேடி எடுத்துக் கொடுத்தாள் மகளிடம்.

''கவனமாய் வைச்சிருக்க வேணும் குஞ்சு, அண்ணையின்ரை கைபட்ட பொருளெண்டுதான் பக்குவமாய் வைச்சிருந்தனான்''

அவளது வார்த்தைகளை முந்திவிட்டன, கண்ணீர்த்துளிகள். தர்சினி அதைக் கவனிக்கவில்லை. 'ஆமிசெற்' கையில் கிடைத்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தபடி ஓடினாள்.

இடையில் அறுபட்ட நினைவுகள் மீண்டும் தொடர்ந்தன. நீண்ட நேரமாக அப்படியே சமைந்துவிட்டாள். ஏதோ எரிந்து கருகும் மணம் மூக்கைத் துளைக்கவே மைதிலிக்குத் தான் அடுப்பில் அரிசிவேக வைத்த நினைவு வந்தது. அவசரமாகக் குசினியை நோக்கி விரைந்தாள்.

குசினிக்குள் யாரோ கதைப்பது போல் குரல் கேட்டது. கிட்டப்போன பின்தான் அது தர்சினியின் குரல் என்று புரிந்தது. 'தர்சினி யாரோடு கதைக்கிறாள்' என்று எண்ணியவாறு குசினிக்குள் நுழைந்தவள், துணுக்குற்று அப்படியே நின்று விட்டாள்.

ஆமி செற்றில் இருந்த ஆமியின் உருவங்களை ஒவ்வொன்றாக எடுத்து ஒரு தடியினால் அடித்து, அடித்து எரியும் அடுப்புக்குள் போட்டுக் கொண்டிருந்தாள் தர்சினி.

''டேய்! ஆமிக்காரா நீதானே அடிச்சு ஆக்களைக் கொல்லுறது? இனிமேல் அடிப்பியா! சொல்லுடா! சொல்லுடா! உன்னை அடுப்புக்கை போட்டு எரிச்சாத்தான் சரி; அப்பதான் இனி அடிக்க மாட்டாய்''

உரத்து ஏசியபடி, கருகி எரியும் அந்த உருவங்களை உறுத்துப்பார்த்துக் கொண்டிருந்தாள் தர்சினி. □□

# கண்ணீர்ப்பூ மாலைகளே!

□

வீ. பரந்தாமன்

காவலை மேவிய நாயகன் சிந்திடும்
கண்ணீர்ப்பூ மாலைகளே! - நீங்கள்
சாவை மகிழ்வுடன் தாங்கி நடந்திடும்
தன்மையைப் பேசுங்களே!

கட்டி அணைத்தண்ணன் முத்தமிட் டேவிடும்
கரும்புலி அம்புகளே! - பகை
முட்டி அழிக்கையில் மூளும் உணர்வினை
முன்வந்து கூறுங்களே!

பொங்கும் தமிழ்மறம் தங்கிட இட்டவன்
பூட்டும்பொற் பேழைகளே! - நீங்கள்
செங்களம் ஆடிடச் செல்கையில் உங்களின்
திண்மையைச் செப்புங்களே!

ஓங்கும் புகழ்வெற்றி ஈழக் கனவினில்
உள்ளம் களிப்பீரோ? - உமைத்
தாங்கும் தலைவனின் அன்பில் நெகிழ்ந்தொரு
சாவை அணைப்பீரோ?

மண்ணின் விடியலும் மக்கள் அவலமும்
மனத்தில் நினைவீரே! - உமை
எண்ணும் பொழுதந்தி மாலையவ் வைகறை
என்னத் தெரிவீரே!




தேச விடியலை ஆக்கி எழுகின்ற
செந்தீக் கொழுந்துகளே! - நீங்கள்
ஆயிரம் வீரரின் ஆற்றலைப் பெற்றிட்ட
ஆண்மைதான் எப்படியோ?

காற்றிலும் நீரிலும் மெல்லக் கலந்திடும்
கற்பூரக் கட்டிகளே! - உங்கள்
ஆற்றலும் தற்கொடை மான மறங்களும்
வாழ்த்தி வணங்குவமே!

□□

'கரும்புலிகள்' நினைவு ஒலிநாடா

மதிப்பீட்டுரை

# "கசெற்" இலக்கியத்தின் இன்னொருவெளிப்பாடு

யாழ்ப்பாணத்தின் அண்மைக்கால இலக்கிய வெளிப்பாடுகளின் தன்மை பற்றியும் அவற்றின் மக்கள் நிலை ரசனை பற்றியும் விசாரித்தறிந்த ஓர் இலக்கிய மாணவர் "கசெற் இலக்கியங்கள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்.

இது கருத்துள்ள ஒரு சொற்றொடராகும். 1990 முதல் மக்களின் மகிழ்வளிப்புச் சாதனங்களின் பயில்வு முடக்கப்பட்டதன் பின்னர் 'கசெற் இலக்கியங்கள்' சில புதிய பரிமாணங்களை எட்டிப்பிடித்துள்ளன. தமிழ் சினிமாவழியாகக் கடந்த இரு பத்தாண்டுகளுக்கு மேல் ரஞ்சகப்படுத்தப்பட்ட கவிதை - இசை இணைவு 1990 இல் ஏற்பட்ட புதியசவாலை ஏற்றுக்கொள்வதற்கான கலைவடிவப்பின்புலத்தைத் தந்தது.

முதலில் தமிழகத்து இசைக்கலைஞர்களைப் பயன்படுத்தி வெளிவந்த ஒலி நாடாக்கள் போகப் படிப்படியாக உள்ளூர்க் கலைஞர்களையே பயன்படுத்தும் முறைமை தொடங்கிற்று.

அந்த முயற்சியுடன் இன்றைய போராட்ட நிலையினை இசையில் வடித்தெடுக்கும் கலை முயற்சி கோட்பாட்டு முறையிலும் செயல்முறை நிலையிலும் வெற்றிபெறத்தொடங்கியதெனலாம்.

இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்தது, மூன்று 'தனிமங்களி'ன் இணைவு ஆகும். புதுவை இரத்தினதுரை என்ற கவிஞன், கண்ணன் என்ற இசையமைப்பாளன், சுந்தரலிங்கம் முதல் சாந்தன் வரை என வரும் சாஸ்திரிய - மெல்லிசைக் கலைஞர் ஆகியோரின் இணைவு இந்த 'இலக்கிய இசை'க்குப் பொருளும் வடிவும் கொடுத்தது.

"நெய்தல்" என்னும் ஒலி நாடா இந்தக் கலைக்கோலத்தின் உன்னத உதாரணமாக அமைந்தது.

அதனைத் தொடர்ந்து இப்பொழுது "கரும்புலிகள்" என்ற இந்த ஒலி நாடா (பாடல்கள்) வெளியாகியுள்ளது.

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த ஒலி நாடாவில் புதுவை இரத்தினதுரையின்

ஒன்பது ''இசையாக்கங்கள்'' இடம்பெற்றுள்ளன. கரும்புலிகளின் வீரத்தையும் தியாகத்தையும் எடுத்துக்கூறும் வகையிலமைந்த இந்தப் பாடல்களில் புதுவை - கண்ணன் இணைவின் இன்னொரு கலை உயிர்ப்பினைக் கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளது.

இக்கட்டத்தில், புதுவை இரத்தினதுரையினதும், கண்ணனினதும் படைப்புத் திறன்களின் தளங்கள் பற்றி (மிகச்சுருக்கமாக) அறிந்து கொள்வது அவசியமாகும்.

புதுவை இரத்தினதுரையின் கவிதாவன்மை அவர் வாசகர் — கேட்போர் மனதிலெழுப்பும் உணர்ச்சிப் படிமங்களிலேயே தங்கியுள்ளது.

சொற்களின் ஒலி வீச்சும் அவற்றின் உணர்ச்சி வீச்சும் இணைகின்றபொழுது கேட்போர், வாசிப்போர் உள்ளங்களிலே அந்தச்சொற்கள் சுட்டும் விடயங்கள் ''காட்சிகளாக'' விரியும். பாரம்பரிய வாழ்க்கை முறையின் உணர்ச்சிக்கட்டங்களை - உணர்வு மையங்களைச் சுட்டுவதன் மூலம், இழக்கப்பட்டவற்றினால் ஏற்படும் சோகத்தை எடுத்துக் கூறுவது, இவரது அண்மைக்காலத்து கவிதைகளின் ஒரு முக்கிய பண்பு. இவர் கவிதைகளிலிருந்து மேற்கிளம்பும் படிமங்கள் வெறுமனே கட்புலக்காட்சிகளாகவோ, செவிப்புலக் கிளர்வுகளாகவோ இருந்து விடாமல், அவற்றுக்கு மேற்சென்று ''ஸ்பரிச உணர்வுகளாக'' (அதாவது நமது உடலிலே உணரப் படுவனவான ''மெய்ப்பாடு'' களாக) நம்மைக் கவர்வன.

''வாசலிற் காற்றென வீசுங்கள்'';

''காவியச்சந்தன மேனிகளே''

எனவரும் வரிகள் நமது புலப்பதிவில் ஏற்படுத்தும் நுண்ணிய தாக்கத்தினை விளங்கிக் கொண்டால் புதுவை இரத்தினதுரையின் 'நதிமூலம்' தெளிவாகிவிடும்.

இந்தக் கவிதையாக்க ஆற்றல் இணையும் இசையுடன் இயைந்து உயிர்ப்புக் கொடுக்கும் குரல்கள் மூலமாக வெளிவரும் பொழுது, இந்தக் காலகட்டத்தின் மானுடதாகங்களும், மனித ஓலங்களும் கலைப்பதிவு பெற்று விடுகின்றன.

புதுவை இரத்தினதுரையின் கவிதையின் உயிர்ப்பை எடுத்துக் காட்டுவதாகவும் அந்தக் கவிதைக்குள்ளிருக்கும் ஒத்திசையின் கருத்துத்தொனிகளை வெளிக்கொணருவதாகவும் அமைவது கண்ணனின் இசை.

கண்ணனின் இசையாக்கத்தில் அவர் 'மெட்டு'க் களை (*MELODY*) உருவாக்கும் முறைமை முக்கியமானதாகின்றது. அருபமான ஒலிக்கு ஒரு ஒழுங்கமைதிப்பட்ட 'உருவம்' அமைக்க முனையும் பொழுது 'மெட்டு' உருவாகின்றது. இந்த உருவாக்கத்தின் அழுத்தங்கள், மிடற்றால், வாத்தியங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன். கண்ணன் தனது இசையாக்கத்தின் உயிர்ப்பு மையங்களை அழுத்திக் காட்டுவதற்கு நரம்பு வாத்தியங்களையே பெரும்பாலும் பயன்படுத்துவார். வயலின், சித்தார், 'ஓகனி' ல் வரும் கலப்போசைகள் இவரின் இசையமைப்புக்கான வாத்தியங்களாகவும் ஏற்ற இறக்கக் குறியீடுகளாகவும் அமைகின்றன.

கர்நாடக சங்கீதத்தின் சாஸ்திரிய வளத்துக்குள் நின்றுகொண்டு இந்த உணர்ச்சி நெகிழ்வுகளைக் கண்ணன் ஏற்படுத்துகின்றார்.

கண்ணனின் இந்த இசையாக்க முறைமை, புதுவை இரத்தினதுரையின் அடிநாதமான மானுடதாக வெளிப்பாடு, பண்பாட்டுப் படிமச்சித்திரிப்புடன் இணைகின்ற பொழுது அற்புதமானதோர் இலக்கிய-இசைக்கலவை ஏற்படுகின்றது.

இந்த ஒலி நாடாவில் அந்தக் கலவை இரண்டு பாடல்களில் அற்புதமாக இணைந்துள்ளது. ''இங்குவந்து பிறந்த பின்பே இருந்த இடம் தெரியும்'' என்ற பாடலும்; ''போரம்மா'' என்ற பாடலும் இந்த இசைவைக்காட்டுகின்றன.

இவற்றின் இந்த வெற்றிக்குக் காரணம் இந்தக் கவிதையும், இந்த இசையமைப்பும் வேண்டி நிற்கும் ''குரல்'' வந்து பொருந்தியுள்ளமைதான்.

மற்றைய பாடல்களில் ஒன்றையொன்று தங்கி நிற்க, இந்த இரண்டு பாடல்களிலும் அந்தக் கலவை (*MIXTURE*) சேர்வை (*COMPOUND*) ஆகிறது.

ஆனால் புதுவை - கண்ணனின் இந்த இணைவு ஒட்டு மொத்தமான ஒரு ஒத்திசைவுத் தோற்றத்தினை (*ENSEMBLE*- அதாவது இன்னொரு நிகழ்வின் இசைப் படிமமாகத் தருதலை) ஏற்படுத்துகின்றன. ''போரம்மா'' என்றபாடல் இதனை நன்கு புலப்படுத்தும்.

□□

இத்தகைய இசையமைப்புக்கள் கேட்பதற்கு ரம்மியமானவை. ஆனால் அதைக் கேட்பவர்கள் தங்கள் வாய் விட்டுப்பாட முடியாத அளவுக்கு இசைச்சிக்கலானவை.

ஆனால் வெகுசன நிலையில் வாய் விட்டுப்பாடப்படக்கூடியவையே சமூக ஒருங்கியைபுக்கான பாடல் முறையாகும்.

அந்த அம்சம் மிகமுக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

கரும்புலிகள் ஒலி நாடாவின் வெற்றிக்கு ஒலிப்பதிவுத் தொழில் நுட்பம் பெரிதும் உதவியுள்ளது என்பது அதனைக் கேட்கும்பொழுது நன்குமனதிற் பதிவாகின்றது.

தனிப்பட்ட கலைத்திறன்கள் இணையும்பொழுது சமூக ஒருங்கியைபினையும் ஒத்தியைபினையும் எடுத்துக்காட்டும், வற்புறுத்தும் கலையாக்கங்கள் தோன்றுகின்றன.

அதற்கான ஒரு நல்ல எடுத்துக்காட்டு ''கரும்புலிகள்'' ஒலி நாடா.

**– கா. சி.**

□□

# தாயகக்கனவு

**[குறும்படம்]**

□

## ஒரு ரசனைப் பகிர்வு

தமிழீழத்தின் இன்றைய சூழலில் 'வீடியோ' என்ற சாதனத்தின் மூலமான கலையாக்க முயற்சிகள் ஆரம்ப நிலையினின்றும் முன்னோக்கித் தொடருதலை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இரண்டாம் கட்ட ஈழப்போரின் பின்பு 'இனியொரு விதி' என்ற குறும்படத்துடன் ஆரம்பமான இந்த 'வீடியோ' சாதனத்தூடான எமது கலை முயற்சிகள் 'தமிழோசை' 'இது எங்கள் தேசம்' எனத் தொடர்ந்து

இப்பொழுது 'தாயகக் கனவு' வரை வந்துள்ளது. (கண்ணீர் என்ற குறும்படமும் பார்க்கக் கிடைத்தது. அதனை இன்னொரு சந்தர்ப்பத்தில் நோக்கலாம்)

'தாயகக் கனவு' கிட்டத்தட்ட அரை மணி நேரம் கொண்டது. இது கரும்புலிகளின் இயல்புகள் மற்றும் நடவடிக்கைகள் என்ற அம்சங்களைச் சுட்டுகின்றது. இதனால் 'கரும்புலிகள்' பற்றிய எமது எண்ணங்களை இப்படம் ஒரு சரியான செல்திசையில் வைக்க முனைந்துள்ளது எனலாம். அவர்களின் வாழ்க்கை, அவர்களுடைய சிந்தனைகள், உணர்வுகள் என்பவற்றை அடிப்படையாக அல்லது வெளிப்படுத்துவதாக இப்படம் சித்திரிக்கிறது.

சாதாரண குடும்பத்தின் ஒரு இளைஞன் எவ்விதம் போராட்டத்துடன் இணைந்து ஆயுதம் ஏந்துகிறான் என்பதையும், அவன் கரும்புலியாகி விடுவதையும் சூழ்நிலைக் காரணங்களை உணர்த்தி வெளிப்படுத்துகின்றது இப்படம்.

ஒரு நாள் குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலினால் வீடுகள் இடிந்து மனிதர்கள் சிதறிப் பலியாகிறார்கள். இந்த இடத்தில் நெறியாளரின் காட்சிப்படுத்தல் திறனைப்பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுதல் பொருத்தமானது. தமிழீழத்தின் மீது நிகழ்த்தப்படும் கண்மூடித்தனமான இராணுவ நடத்தையை இந்தக் காட்சிப்படுத்தல் சிறப்பாக்கியுள்ளது. விமானங்கள் இரையும் போது ஆறுவயதிருக்கும் ஒரு பெண் பிள்ளையும், ஒரு வயோதிபப் பெண்ணும் பயத்தில் பரிதவிக்கும் காட்சி. பிள்ளை பதுங்குகின்றது. வயோதிபப் பெண் நின்றுகொண்டே தலையின்மேல் கைகூப்பி வணங்கியபடி தன் உயிருக்காக கடவுளை மன்றாடுகின்றாள். (இந்த முரண் தலைமுறை இடைவெளியையும் சுட்டுகின்றது.) ஆனால் இருவரும் பலியாகின்றார்கள்.

தாக்குதல் முடிந்ததும் இந்த இளைஞன் அந்த இடத்துக்கு ஓடிவருகின்றான். வந்து கண்ட அந்த நிகழ்வுகளின் பாதிப்பு அவனை மனஉந்துதற் படுத்தி போராட்டத்தில் இணைக்கின்றது. அவன் கரும்புலியாகி எதிரிகளின் முகாமை அழிக்கத் தன் தோழரிடம் விடைபெற்றுச் செல்லும்போதும், அந்த விமானத் தாக்குதலில் பலியான அந்தக் காட்சிகள்தான் அவன் நெஞ்சுக்குள் மிதந்து மிதந்து வருகின்றன. அந்தக் காட்சிகளின் நினைவுஉக்கிரம் அவனை உறுதியுடனும், துணிவுடனும், ஆக்ரோஷத்துடனும் உந்தித் தள்ளுகின்றன.

மக்களின் துயரங்களை நினைத்தபடியே ஒவ்வொரு போராளியும் மரணத்தைத் தழுவுகின்றான் என்பதை இது தெளிவாக்குகின்றது

கரும்புலிகளின் உறவு, அவர்கள் அடிக்கும் 'பம்பல்', அவர்களின் அன்பு, பிரிவுத் துயர், தேசப்பற்று, தலைமைத்துவ மதிப்பு, தலைவரின் மேல் அளாதியான ஈடுபாடு, ஒழுங்கு என்பனவற்றை உணர்த்தும் ஒவ்வொரு காட்சியும் படத்தில் இயல்போட்டமாகப் பொருந்தியுள்ளன.

இரவு தாக்குதலுக்குப் போகவிருக் நம் கரும்புலியுடன் மற்றவர்களும் சேர்ந்து சாப்பிட இருக்கிறார்கள். அவன் எவ்வித சலனமுமின்றிச் சாப்பிடுகின்றான். மற்றவர்கள் அவனையே பார்த்தபடியே கண்ணீர் வடித்துத் துயரத்துடன்.. அவன் குறும்புத்தனமாக தன் தோழரை மறுபக்கம் புதினம் காட்டி முகம் திரும்ப வைத்துவிட்டு, அவர்களின் சாப்பாட்டில் அள்ளிக்கொள்கின்றான். மற்றவர்கள் — அவர்கள் கரும்புலிகளாக இருப்பினும் — கண்ணீர் சொரிந்தபடி இருத்தல், உறைந்திருக்கும் மௌனம் - இது ஓர் உருக்கமான காட்சி. இன்னொரு இடத்தில், தான் 'இரவு தாக்குதலுக்குச் செல்கின்றேன்' என்ற பின்பு தனது பாவ

னைப் பொருட்களை சக தோழரிடம் பகிர்ந்து கொடுக்கும் இடம்; தோழர்கள் வரிசையாக - மௌனமாகத் துயருடன் நிற்கிறார்கள். அவன் தன்னுடைய பொருட்களை ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து அவர்களின் தோளின்மேல் போட்டபடி வருதல். பொருட்கள் முடிகின்றன. பை(Bag) மட்டும் எஞ்சுகின்றது. அதனையும் ஒரு தோழனின் கழுத்தில் மாட்டிவிடுகின்றான். இன்னொரு தோழனுக்கு ஏதுவுமில்லை. அவனுக்குத் தான் மிகப் பிரியமாக வைத்திருந்த(Mouth Ocan) இசைக்கருவியை இறுதியாக ஒரு தரம் ஊதிவிட்டுக் கொடுக்கின்றான். அந்தப் போராளி குனிந்தபடி விழிநீர் சொரிய முந்திய சம்பவத்தை நினைக்கின்றான். முன்னர் அந்த இசைக்கருவிக்காக இருவரும் அடிபட்டுக் கொண்டதை, நினைவோட்டத்தில் காட்டப்படுகின்றது. இந்த இடங்கள் மிக அற்புதமாக அமைந்துள்ளன.

இப்படத்தில் புதுவை இரத்தினதுரையின் இரண்டு பாடல்கள் கரும்புலிகளின் உணர்வுகளைச் சொல்லுகின்றன. இசையும் படத்தொகுப்பும் முன்னர் வந்த படங்களினின்றும் சில அனுபவ முதிர்வினைக் கொண்டுள்ளன. 'தமிழோசை' படத்தை நெறியாள்கை செய்தவரும், 'இது எங்கள் தேசம்'படத்தின் நெறியாள்கையில் இணைந்தவருமான பொ. தாசன் இப்படத்தை நெறிப்படுத்தியுள்ளார். அந்தப் படங்களினின்றும் இக்குறும்படம் உரையாடல், ஒளிப்பதிவு, படத்தொகுப்பு என்ற அம்சங்களில் முன்னேற்றமடைந்துள்ளது எனக் கூறலாம்.

போராளிகளுடன் ஏனைய கலைஞர்களும் இணைந்து இதில் நடித்துள்ளனர்.

எனினும் இந்தப் படங்களைத் தொடர்ந்து அவதானிக்கும் பொழுது'நாடக நடிகர்கள்' என அறியப்படுபவர்கள் (யதார்த்த விரோத நாடகப்பண்பு நடிகர்) கமெராவின் முன் நிற்கும்போதும் நாடகத் தன்மையான நடிப்பு மற்றும் உரையாடல் என்பன வருவது தெரிகிறது. (இது ஆரம்ப கால தென்னிந்திய தமிழ் சினிமாவிலும் காணப்பட்டது. அக்கால சினிமா நடிகர்கள் மேடை நாடக நடிகர்களாக இருந்ததனால்) ஆனால் போராளிகள் இயல்பாகச் செய்வதும் குறிப்பிடத்தக்கது.

சேரலாதன், கணேஸ், செலவராசா, மாதவன், கஸ்ரோ என்று பலருக்கு முகம் தெரிந்த போராளிகளே பாத்திரங்களாக்கப் பட்டிருப்பது 'கற்பனையல்ல இந்தக் கலைப் படைப்பு' என்ற உண்மையை உணரச் செய்கிறது. இது ஒரு யதார்த்தச் சித்திரிப்பு.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் 'கரும்புலிகள்' நாளையொட்டி இப் படத்தைத் தயாரித்துள்ளது.

கரும்புலிகள் எமது போராட்டத்தில் ஒரு புதிய வடிவமான போருபாயம் என்று அறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கரும்புலியும் ஒவ்வொரு சக்திமிக்க போராயுதம் என்பதை இப்படத்தைப் பார்க்கும் போது உணரமுடிகின்றது. தமிழீழக் கலையாக்க முயற்சியில் இன்னுமொரு புதிய பாய்ச்சல் 'தாயகக் கனவு'.

இசை, பாடல், நடிப்பு, தொழில்நுட்பம் என்று கலை, இலக்கிய ஆக்கத்திறன்களில் இன்று போராளிகளும் முழுமை பெற்று எல்லாமுமாகின்ற வளர்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வளர்முகத்தில் 'வீடியோ' என்ற சாதனத்திலும் சாதனைகள் நிகழ்கின்றன.

— கருணாகரன்

# இன்று இருட்டுத்தான் நாளை... சூரியன் தலைக்கு மேலேவரும்



□

புதுவை இரத்தினதுரை

வீதி விளக்குகளுக்கும்
விடியாமல் போன
மூன்று வருடங்களுக்குப் பின்னர்,
இன்று,
நட்சத்திரங்களையும் மேகம் மறைத்து விட;
இருளே தடுமாறும் இருட்டு.
அடிமைச் சுகமே அற்புதமென்று,
அடங்கிக் கிடக்கும் தமிழனைப் போல.....
வெளிச்சம் அற்றுப் போனதை மறந்து,
இருட்டில் வாழப் பழகிய முகங்கள்.
நாளைப் பொழுது எப்படிக் கழியும்?
என்றே எண்ணி;
ஏங்கிய படியே,
இருட்டில் இருந்து இருமும் கணவன்.
பஞ்சு விளக்கில் படிக்கும் பிள்ளைகள்.
பழைய கறியை கொதிக்க வைக்க,
மூட்டிய அடுப்பு வெளிச்சம் தன்னில்;
முட்டை விற்று;
முருங்கைக்காய் வாங்கிய;
வரவு செலவை பார்க்கும் மனைவி.
மாசி மாதப் பனிக்கு,
வாயில்;
பொருக்கு வெடித்த மாதிரியாக,
வெடித்துப் பிளந்த எங்கள் வீதியில்,
மனிதச் சுமைகளைச் சுமந்து சென்று;
கிளாலிக் கரையில்
கொட்டிய பின்னர்,
ஊரின் அயர்ந்த உறக்கம் கலைத்து,
மண்ணெண்ணெய் குடித்த;
மோட்டார் சைக்கிள்,
உறுமிக் கொண்டு ஓடிச் செல்லும்.
யப்பான்காரன் பார்த்தால்......

விரலை.
வாயில்வைத்து அதிசயப்படுவான்.
பெற்றோல் விற்கும் அரபுக்காரன்;
வயிற்றில் அடித்து;
மயக்கம் அடைவான்.
பட்டணம் சென்று படிக்கும் பொடியள்
படிப்பு முடிந்து திரும்பும் போது,
இருண்டு கிடக்கும் வீதியில்..........
அவர்கள்,
" போரம்மா" என்று பாடிக்கொண்டு
போவதைப் பார்க்க மனசு நிறையும்.
தூரத்தில்......
துப்பாக்கி வெடிக்கும் சத்தம்;
எறிகணை விழுந்து வெடிக்கும் அதிர்வு.
பண்டத்தரிப்புப் பக்கமாய்,
இராணுவம்
நகருவதாக "வோக்கி" கதைக்கும்.
ஆங்காங்குள்ள முகாம்களிலிருந்து,
"பிள்ளைகள்" ஏறிப் போகும் வாகனம்,
வீதியில் இரைந்து மெல்ல மறையும்.
ஆயினும் எந்த அச்சமுமின்றி,
இருட்டில் மக்கள் இருப்பர்;
சிரிப்பர்.
"பொடியள்" உண்டு என்ற நினைப்பில்,
நம்பிக்கையோடு ஊர்கள் உறங்கும்.
"தம்பியின் காலத்தில் தமிழீழமென்று"
பாடிக் கொண்டு போன கிழவனில்,
எத்தனை உறுதி முகத்தில் இருந்தது.
இருட்டில் இருந்தும் எங்கள் தாயகம்,
இருப்பை இழந்து போய்விடவில்லை.
எந்த நெருப்பும் எம்மைச் சுட்டு,
எரித்திட முடியாதென்பதை அறிவோம்.
இருட்டில் இருப்பது விடியலுக்காகவே,
விடிவே விடுதலை என்பது சத்தியம்.
இருட்டில் இருந்தும்,
இருட்டைத் துடைப்போம்;
இருகை விலங்கை இன்றே உடைப்போம்.
சூரிய வெளிச்சம் சுதந்திரமானால்,
நாளை எங்கள் மண்ணின் மேலே,
சூரியன் வருவது நிச்சயம்,
நிச்சயம். □□

# எல்லைகள் நகருகின்றன.

□

சுதாமதி

போராளியின் பேனாவிலிருந்து..

தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களாக அங்கே பெரிய சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன. நிலமே அதிரும்படி குண்டு ஒன்று வெடிக்கும். அதனைத் தொடர்ந்து கட்டிடங்கள் அதிர்ந்து சரிகின்ற ஓசை. காலை வேளைகளில் அந்தப் பக்கமாக புகைமண்டலம் கிளம்பி மேலெழும். ''வீடுகளை எரிக்கிறார்களாம்.'' யாரோ சொல்லிக்கொண்டு போவது காதுகளில் விழுந்தது.

எங்கடை வீடும் அதிலை ஒண்டாயிருக்கலாம். ம்...... பெருமூச்சு ஒன்று என்னையறியாமல் எழுந்து தேய்ந்தது. ஊரோடை ஒத்தது தானே என்று ஓரளவு ஆறுதல்பட வேண்டியிருந்தது.

ஆனால் அப்பா, அந்த வீட்டைக் கட்டிமுடிக்க எவ்வளவு துன்பப்பட்டார் என்பது அவங்களுக்குத் தெரியுமே? எவ்வளவு கற்பனைகளோடை அந்த வீட்டைக் கட்டினார். நாள் முழுக்க அந்தச் சீமெந்துப் பாக்ரறியிலை மூட்டை சுமந்து சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து...... ஒவ்வொரு சுவரா எழுப்பி முடித்தபோது... அவரிடம் இருந்த சந்தோஷம்......

ஆனா அதைக்கூட அவங்கள் நீடிக்கவிடேல்லை. அதிலை அவர் ஒருவருசம் கூட வாழேல்லை. ஒரு நாள் பொழுதுபட அவர் வேலைமுடித்து வந்தபோது அவங்கள் அவரைச் சுட்டுப் போட்டாங்கள். எங்கடை சின்னக் குடும்பத்திலை நானும் அம்மாவும் சின்னஞ் சிறு தங்கையும் கதறி அழுது ஒன்றும் பயனில்லை.

அம்மா ஈரவிறகோடு அடுப்படியிற் போராடிக் கொண்டிருந்தாள். புகையை விலக்கி விலக்கி ஊதி அம்மாவுக்கு இருமல் எடுத்தது. அவள் பெரிய சத்தமாக இருமத் தொடங்கினாள். அம்மாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. எங்களுக்காக அவள் நாள் முழுவதும் ஓடி அலைந்து வேலை செய்கிறாள். நாற்பது வயதிலும் ஐம்பது வயதுக்காரி போல வறுமையின் கோரப்பிடி அவளை நன்றாகவே உலுக்கிவிட்டது.

அம்மாவுக்கு நாங்களும் அவள் வளர்க்கும் ஆடு, கோழிகளும்தான் வாழ்வின் ஊன்றுகோல். மெல்ல மெல்லத் தட்டுத்தடுமாறி எங்கள் சீவியம் போய்க் கொண்டிருக்கிறது.

''எடி பிள்ளை சிந்து அந்த விறகை எடுத்துவா'' அம்மாவின் வேண்டுகோளுக்கு சிந்து தலையாட்டி விட்டு தன்னுடைய அலுவலிலேயே கண்ணாயிருந்தாள். பள்ளிக்கூடக் கைப்பணிக்காக சிறு வீடு கட்டிக் கொண்டிருந்தாள். அதன் கடதாசி மட்டைகளும், தாள்களும் அந்தக்

குடிசையின் அரைவாசி இடத்தை நிரப்பியிருந்தன. அம்மா எழுந்து போய்த் தானே விறகை எடுத்து வந்து அடுப்பை ஊதினாள். அடுப்பு பற்றிக் கொண்டது. அவள் பம்பரம் போல வேலை செய்யத் தொடங்கினாள்.

''தம்பி நீ பள்ளிக்கூடம் போக வெளிக்கிடேல்லையே'' அம்மா என்னைக் கேட்டாள்.

''இல்லையம்மா நான் வாறகிழமை வருகிற சோதனைக்கு வீட்டிலையிருந்து படிக்கப் போறன்'' நான் கூறியபடி வெளியே வந்தேன்.

வீட்டுக்குப் பக்கத்தில் நின்ற முருங்கை மரத்தை ஆடு காந்திக் கொண்டிருந்தது. ''சூய்''.... ''சூய்'' அம்மா அடுக்களைக்குள்ளிருந்தபடியே ஆட்டைக் கலைத்தாள். வீட்டைச் சுற்றி அந்த ஒரு மரம் மட்டுமே இருந்தது. ஏதோ புண்ணியத்தாலை இங்கை ஒரு கொட்டில் போட்டாவது இருக்கிறம். அதுபோதும். நீண்ட தொலைவுக்கு அப்பாலே எல்லைவேலி. இந்தப் பரந்தகாணியிலே ஒரு குடிசை. காணிச் சொந்தக்காரன் மரங்கள் நட்டு வேலி போடவேண்டாம் என்று சொல்லிப் போட்டான்.

ம்...... இருக்க இடந் தந்ததே பெருங்காரியம். பிறகு வேலி போட்டு ஏன் நாங்கள் குடியெழுப்ப வகை செய்வான்.

முந்தி, எங்கடை ஊரை ஆமி பிடிக்கமுதல் எங்கடை அந்த வீட்டைச் சுற்றி என்னமாதிரி வேலி போட்டு, சுற்றிப் பூங்கன்றுகள், பழமரங்கள் என்றெல்லாம் வைத்துச் சோலையாக்கி அந்தச் சம்பவம் இன்னும் பசுமையாக இருக்கிறது.

''டேய் கந்தசாமி என்ரை எல்லை வேலியிலை பூவரசு நட்டிருக்கிறாய் இப்பவே தறிக்க வேணும்'' பக்கத்து வீட்டுச் சண்முகத்தார் உரத்த குரலில் அப்பாவிடம் கட்டளையிட்டார்.

நீண்ட காலமாகவே இரண்டு வீட்டுக்கும் பகை. பூவரசு மரம் நன்றாக பருத்து வளைந்து எல்லை வேலியில் பெரிய இடத்தை அடைத்துக் கொண்டிருந்தது. அதனாலை தன்ரை காணியிலை பெருமளவு இடத்தை பூவரசு பிடித்துக் கொண்டதாம்.

அன்று காணி அளந்த போது சண்முகத்தார் கத்திக் கொண்டிருந்தார். பிறகு இரண்டு பேரும் வாய்ப் பேச்சுக்குப் போய் சண்டை முற்றும் நேரம் அம்மா வந்து தடுத்து......

''ஏனப்பா அந்தாளோடை பகைச்சுக் கொண்டிருக்கிறியள், அதைத் தறிச்சுவிடுங்கோ'' என்று அம்மா குழறியபோது ஒருவாறு அப்பா அதை உடனே தறிச்சு புதுசாய் முருக்கங்கதியால் போட்டு ... அது முடிஞ்சுபோன சம்பவம்.

இப்ப அந்தச் சண்முகத்தார் எல்லாத்தையும் பறிகுடுத்து, மிச்சமிருந்ததுகளோடை வெளிநாட்டிலை குடியேறிவிட்டார். 'டும் டும்' மீண்டும் சத்தங்கள் கேட்டன. எங்கடை வீடு, சண்முகத்தாரின்ரை வீடு எல்லாம் இப்ப உடைஞ்சு போயிருக்கும். வேலி எல்லை எல்லாவற்றையும் அவன் புல்டோசராலை அழிச்சிருப்பான்; எல்லைக் கதியால் எல்லாம் அழிஞ்சிருக்கும். ம்...... சண்முகத்தாருக்கு இந்தச் சத்தம் கேக்காதுதானே?

தாழ்வாரத்திலே கட்டப்பட்டிருந்த ஆடு பசியால் கத்தியது. மீண்டும் அந்தக் காய்ந்துபோன சருகுகளிடையே தலையைக் குடுத்தது. அம்மா எங்கேயோ இருந்து வாடிய புற்களைக் கொண்டுவந்துபோட்டாள். அது கத்துவது நின்றது.

''ம்... அங்கையெண்டால் என்ன குறை வீட்டைச் சுற்றி குழை குழையாய்க் கிடக்கும்.''

''விறகுக்குப் பஞ்ச மில்லை'' அம்மா ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.

இப்படித்தான் அவள் எப்போதும் தனது கடந்த கால வாழ்க்கையைப்பற்றி, வீட்டைப் பற்றி சொல்லிக் கொண்டிருப்பாள். அதிலை அவளுக்கொரு நிம்மதி போலை.

''அநியாயப் படுவாங்கள் இப்படி எத்தினை தமிழ்ச்சனங்களை அகதியா சிரழிச்சுப் போட்டான்.'' அம்மா தனக்குள் பேசியபடி ஆடு கட்டிய இடத்தைக் கூட்டத் தொடங்கினாள்.

இண்டைக்கு எப்படி யெண்டாலும் எங்கடை தோட்டக் காணியைப் பார்த்துவிட்டு வரவேணும். வாழைக்குலை யெண்டாலும் வெட்டலாம். சைக்கிளை எடுத்தபடி வெளியில் வந்தேன்.

நான் சிநேகிதப் பொடியன் வீட்டுக்குப் போய் வருவதாகக் கூறிப் புறப்பட்டேன். அம்மா வழமை போல ''கவனமாய்ப் போய் வாதம்பி'' என்று கூறி வைத்தாள்.

வரவரச் சத்தங்கள் அதிகரித்தவண்ணமிருந்தன என்றாலும் நான் சைக்கிளை விரைவாக உழக்குகிறேன். வரேக்கை விறகும் கட்டி வரலாம். எனக்குள் எண்ணியபடி வந்து கொண்டிருந்தேன்.

சனங்கள் பதற்றமாகப் போய்வருவது போலத் தெரிந்தது. ''அண்ணை உங்காலை போகேலாது''- என்னைப் போல வீடு வாசல் பார்க்கச் சென்ற சனங்கள் ஏமாற்றத்தோடு திரும்பினர்.

எங்கடை காணி பின்னுக்குத்தான் இருந்தது.

நான் வருவது வரட்டும் என்ற எண்ணத்தோடு அவதானித்தபடி சென்று கொண்டிருந்தேன்.

''அண்ணை அங்காலை போகேலாது; ஆமிக்காரங்கள் நிற்கிறாங்கள்'' - என் சைக்கிளை மறித்தபடி போராளி ஒருவன் ஓடி வந்தான். நிமிர்ந்து பார்த்தேன். என்னுள் அதிர்ச்சி. அவனில் நிறைய மாற்றங்கள் தெரிந்தன. அவனும் என்னை அடையாளம் கண்டுகொண்டான்.

அவன் முன்பு திருமலையிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் என்னோடு படித்தவன். நல்ல கெட்டிக்காரன். நாங்கள் இருவரும் நண்பர்களாயிருந்தோம். இடையில் அவன் இயக்கத்துக்குப் போய்விட்டான். நான் படிப்போடு மூழ்கிப் போய்விட்டேன்.

அவன் சந்தோஷத்தால் ''எங்கையடா போறாய்? எப்படி இருக்கிறாய்? என்ன செய்கிறாய்? என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டு போனான்.

என்னால் எதற்கும் பதில்சொல்ல முடியவில்லை.

அவனுக்கு நான் சொல்லக்கூடிய பதில், நானும் அவனுடைய கைகளைப் பற்றிக் கொள்வதுதான்.

அம்மா இன்றைக்குத் தேடிக் கொண்டிருப்பா. நான் எங்கும் போகவில்லை. நான் இந்தத் தேசத்தில்தான்; இந்த மண்ணுக்காகத்தான்; நாங்கள் எங்கட வீட்ட திரும்பப் போறதுக்காக.

□□

மா நகர சபை
யாழ்ப்பாணம்
நூலகம்



# கௌதம புத்தருடன் - ஒரு கவிதா நேர்காணல்




ஜெ. கி. ஜெயசீலன்

நான்:-

தார்மீகப் பெரு நெறியைத் தக்கபடி போதித்து
யார் மீதும் பகையில்லா யாகத்தைச் செய்தவனே!
உனதடியை வணங்கி வரும் உன்னரிய புத்திரர் தாம்,
மனதறியச் செய்துவரும் மா கொடுமை அறியாயோ!
ஊருறங்கும் நள்ளிரவில் ஊளையிடும் ''ஷெல்'' நரிகள்!
போருறங்காப் பூமியிதில் பொழுதெல்லாம் குண்டு மழை!
நீ வளர்த்த கருணையினை நெஞ்சத்திற் பேணாமல்
தீ வளர்த்த தென்னிலங்கை திருந்த வழி சொல்வாயா?

புத்தர்:-

அன்பார்ந்த தமிழ் மகனே! அவலத்தின் உள்ளே
மண்பாய்ந்து அழிகின்ற மடமை பல கண்டேன்!
போதி மர ஞானமதைப் போதித்தும் என்பக்தர்
நீதி தரவில்லையெனும் நீசத்தாற் துடிக்கின்றேன்!
கொல்லாமை பேரறமாம்; குரலெடுத்துக் கூறிய என்
சொல்லாலே ஏமாற்றிச் சுட்டெரிக்கும் அரசியலார்
பொல்லாத வினையெல்லாம் புரிகின்றார்; பின் வந்து
கல்லான என் சிலையைக் கண்மூடித் தொழுகின்றார்!
என் செய்வேன் தமிழ் மகனே! என்றன் பெயர் சொல்லிப்
புண் செய்யும் ''பௌத்தர்க்குப்'' புத்தி தரப்பார்க்கின்றேன்!
வன் செய்கைக் காரர் அவர் வருகின்ற நாளிலெனும்
இன் செய்கை பல புரிய இதயத்தால் வேண்டுகிறேன்!

நான்:-

அரச மரத் தொழுகையினை அனுதினமும் செய்வதனால்
''அரசும் மரம்'' ஆகியதோ! அறியேன் புத்தா!!
சங்கமித்தா கொண்டுவந்த சமயநெறிச் சின்னமதை
அங்கமதால் வணங்கி வரும் அரசியலார் எங்களது,
தங்கமணி ஈழத்தைத் தான் விழுங்கிப் போகின்ற
பங்கமதை பார் புத்தா! பணிந்தோம் இல்லை!!
'வை' எட்டும், 'பொம்மர்' களும் வானத்தை உழுதுவரக்
கையெட்டும் தூரத்திற் களப்பலிகள் நடக்கிறது!

மெய்ஞானம் போதித்த மேலான கௌதமனே!
பொய்ஞானம் போதிக்கும் பொல்லாதார் ஆட்சியிது!
அருளா தாரமென அஹிம்சைவழி சொன்னீர்;
பொருளா தாரத்தையே, பொழுதினிலே தடைசெய்தார்!
போக்கிரிகள் அரசாளும் பொன்னான சிறு தீவில்
தாக்குதல்கள் எல்லாம் நம் தலைமீதே நடக்கிறது!
கேட்கிறதா அழுகுரல்கள்? ஹெலி, பொம்மர்பேரிரைச்சல்?
ஆக்கினை தான் எம் வாழ்வா? ஆவேச நெருப்பானோம்!!

புத்தர்:- பொல்லாத யுத்தத்தாற் புண்ணாகிச் சிதைகின்ற
எல்லாநற் தமிழர்க்கும் எனதாழ்ந்த அனுதாபம்!
நேற்று வரை ஈழத்தை நெருப்பிட்டுச் சாகடித்த
கூற்றுவரைப் பக்தரெனக்கொண்டதற்காய் வருந்துகிறேன்
தங்கமணிச் சிறு தீவைத் தன்னலத்தால் வதைக்கின்ற
அங்கமதியீனமுறும் அரசியலார் அழிந்தொழிவார்!
இனவாத வெறி முற்றி எரிகின்ற திருநாட்டைப்
பிணவாச நாடென்று ''பிரித்'' தோதும் அரசாட்சி
இனியேனும் வரும் நாளில் இல்லாமற் போகின்ற
கனிவான நாள் தோன்றும்! களப்போரிற் புலி வெல்லும்!

நான்:- தென்னிலங்கைத் தீயவரின் திருந்தாத அரசியலை
மண்விளங்கச் சொன்னதற்கு மனதார என் நன்றி!
உள்ளபடி லங்காவின் உண்மைகளைத் தெளிவாக்கும்
நல்ல பதில் தந்தாய் நீ; நன்றியுடன் விடை பெற்றேன்! □□

□□ □□ □□

**ஆனையிறவு எதிரியின் தளம் மீதான**
**விடுதலைப்புலிகளின் வரலாற்றுச் சமரின்**
**இரண்டாம் ஆண்டை நினைவு கொள்வோம்.**

*எங்கள் மண்ணின் நேர்கோட்டில்*
*எதிரியை நிலைகொள்ளவிட்டு*
*இன்னும் எத்தனை நாட்கள் இருப்பது?*
*தாயகத்தின் தங்கமேனியை*
*பகைவன் ஏறிமிதிப்பதைச் சகித்துக் கொண்டு*
*விழிமூடி எப்படி உறங்குவது?*

—வெளிச்சம்

மாநகர சபை
யாழ்ப்பாணம்






# மீண்டும் நேர்ப்பாதையில்

சு. மகேந்திரன்

காலையில் இருந்தே இன்று எப்படியும் சிநேகிதியைப் பார்த்துவிட்டுத்தான் பள்ளிக்குப் போகவேண்டும் என, மனைவி கூறிக்கொண்டிருந்தாள். மூன்று நாட்களாகச் சாக்குப்போக்குச் சொல்லியாகிவிட்டது. இன்று எப்படியும் கூட்டிப்போய்த்தான் ஆகவேண்டும். நேற்று 'பூபால சிங்கத்தில்' வாங்கி வந்த 'வெளிச்சம்' மாத இதழைப் புரட்டிக்கொண்டு அடுப்படியைத் திரும்பிப் பார்த்தேன்.

அதனைக் கண்ட ராசாத்தி மூன்று நாட்களாகக் கூறிக்கொண்டிருந்ததைத் திரும்பவும் ஒப்புவித்தாள்.

''எல்லா டீச்சசும் போய் வந்துவிட்டார்கள். நாளைக்கு மிஸிஸ் காந்தன் கொழும்புக்குத் திரும்பப் போகிறாள். பள்ளிக்கூடத்தில் சொன்னவர்கள். முன்பு நான் கொழும்புக்குச் சென்றபோது, தங்குவதற்கு தனது உறவினர் வீட்டில் ஒழுங்கு செய்து தந்தவள். இன்று அதனால்தான் வெள்ளனச் சமைத்தனான்'' என்று தொடர்ந்து கதைத்துக் கொண்டிருந்தவள், கொதிக்கும் எண்ணெய்க்குள் கத்தரிக்காயைப் போட்டுக்கொண்டிருந்தாள். தேங்காய் எண்ணெய் சிறிது விலை குறைந்துவிட்டால் போதும், எல்லாம் பொரித்த கறியாகவே செய்வாள்.

எதுவும் பேசாமல் 'வெளிச்சத்தில்' வந்த 'லொங்டன் கியூசின்' மொழிபெயர்ப்புக் கவிதையில் மூழ்கியிருந்தேன். அடிமையாக்கப்பட்ட கறுப்பினத்தவரை வைத்து, அருமையாக ஆக்கப்பட்ட கவிதை அது. கவிதையைப் படித்தபின் இதழை மூடி வைத்துவிட்டு, நேரத்தைப் பார்த்தேன். நேரம் பத்து ஆகி இருந்தது.

நாங்கள் இடம்பெயர்ந்து வந்திருந்தோம். இடம்பெயர்ந்த பாடசாலைகள் பின்னேரங்களில்தான் நடைபெறுகின்றன. இதனால் மனைவி செவ்வாய், வியாழன் ரியூசன்களை இழந்திருந்தாள்; குடிமுழுகி விட்டதுபோல் குழம்பிப்போய் இருந்தாள்.

சமைத்து முடித்து அம்மாவுக்கும் உணவைக் கொடுத்துவிட்டு, ராசாத்தியை அவளது பள்ளியில் இறக்கிவிட்டு, மூன்று மைல் தூரத்தில் இருக்கும் எனது பள்ளிக்குப் போகவேண்

டும். இன்று வேறொரு வேலையும் சேர்ந்து கொண்டதை நினைக்கும் போது, எரிச்சலாக வந்தது.

திரும்பவும் சமையல் அறையைத் திரும்பிப் பார்த்தேன். அவள் அப்பளம் பொரித்துக் கொண்டிருந்தாள்.

''கொழும்பில் இருந்து வந்தவர்களை ஏன்தான் பார்க்க ...?'' எனக் கூறி, சட்டென நிறுத்திக்கொண்டு விட்டேன். இன்று காலையில் இருந்து சந்தோசமாக இருந்தவளைக் குழப்ப விரும்பவில்லை. அவளும் அதற்கு மறுமொழி கூறாமல் இருந்தது வியப்பாக இருந்தது.

இன்று, அம்மா தானாகப் போட்டுச் சாப்பிட வேண்டியதுதான். அக்காவும் யாழ்ப்பாணத்துக்கு ஏதோ வங்கி விஷயமாகப் போயிருந்தாள். சென்ற மாதம் மகளுடன் ரெலிபோன் கதைக்கக் கொழும்புக்குப் போனவள், போய் வந்த சிரமங்களை பலமுறை விபரித்துக் கொண்டிருந்தவள், அடுத்த மாதமும் போகவேண்டும் என நேற்றும் கூறிக்கொண்டிருந்தாள். அத்தானையும் மற்றப் பிள்ளைகளையும் எங்கள் பொறுப்பில் விட்டுவிட்டு அவள் கொழும்பு — யாழ்ப்பாணம் என்று போய் வருவதற்கு நாங்கள் இடம் பெயர்ந்து வந்தது மிகவும் வசதியாக இருக்கிறது.

''இப்போது எங்களுடன் சாப்பிடப் போகிறீர்களா?'' என ராசாத்தி அம்மாவைக் கேட்டாள்.

''நீ மூடிவைத்துவிட்டுப் போ. ராணி வந்த பின்பு, அல்லது அவள்வர நேரமாகினால் நானே போட்டுச் சாப்பிடுகிறேன்'' என்றாள் அம்மா.

பத்து நாற்பத்தைந்துக்கு மதிய உணவு உட்கொண்டாகிவிட்டது. இனி இரண்டு மணிக்குத் திரும்பவும் பசிக்கும். கன்ரீனில் வடையொன்றைக் கடித்துத் தேத்தண்ணி குடிக்க, எட்டு ரூபா வரை செலவாகும். முன்பெல்லாம் செலவுகளைப் பற்றி நினைப்பதே இல்லைஇன்று எதற்கும் ஒருமுறை சிந்திக்கவேண்டி இருக்கிறது.

அத்தான் ஏதோ விஷயமாக ரவுணுக்குப் போயிருந்தார். ரவுண் என்றதும் மிஸிஸ் காந்தன் பற்றிய வேறொரு நினைவும் சடுதியாக வந்தது. முன்பு எங்கள் பாடசாலையிலேயே அவளது மகளும் படித்து வந்தவள். பின் பாடசாலை இடம் மாறியது. பள்ளி சரியாகத் தன்னை ஆக்கிக்கொள்ள, இரண்டு வாரங்கள் பிடித்தன. இதற்குக்கூட பல பெற்றோர்களால் பொறுமையாக இருக்க முடியவில்லை. தங்கள் பிள்ளைகளின் 'சேர்ட்டிபிக்கற்'றுக்களை எடுத்துக் கொண்டு, வேறு பள்ளிகளுக்கு ஓடினர். மிஸிஸ் காந்தனுக்கும் அதிபருக்கும் இடையில் அரைமணி நேரம் தர்க்கம். கடைசியில், அவளது ஒரே மகளின் 'சேர்ட்டிபிக்கற்'றுகளை அதிபர் அவளிடம் கொடுத்தார். அதன்பின் ஒருநாள் மிஸிஸ் காந்தன் எதிரே வரும்போது என்னைப் பார்த்துச் சிரித்தாள். நான் சிரிக்கவில்லை. மகள் நகர்ப் பாடசாலை ஒன்றின் 'ரை'யுடன் அவள் பின்னால் வந்து கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். மிஸ்ரர் காந்தன் கொழும்பில் வேலை செய்கிறார். இவள் இரண்டு மாதத்துக்கு ஒருமுறை கொழும்பு சென்று வருபவள். ஒவ்வொரு முறை கொழும்பு செல்லும்போதும் திரும்பி வந்த பின்பும் ராசாத்தியை அவளது

வீட்டில் கொண்டுபோய் விட்டு, அவர்களின் செல்லக் கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். மிஸிஸ் காந்தன் ராசாத்தியின் பள்ளியில் ரீச்சராக இருந்து சென்ற ஆண்டு ஓய்வு பெற்றவள். மாட்டேன் என்றாலும் ராசாத்தி விடமாட்டாள். மிஸிஸ் காந்தனூடாக அவள் கொழும்பைப் பார்த்து வந்தாள். ராசாத்திக்குச் சைக்கிள் ஓடத் தெரியும். அடுத்த மாதம் எப்படியும் ஒரு லேடிஸ் சைக்கிள் வாங்கிவிட வேண்டும். அதன்பின் இவ்வகைத் தொந்தரவுகள் இராது.

கேற்றடியால் வெளிக்கிடும்போது நேரம் பதினொரு மணி ஆகி இருந்தது. வழக்கம்பரையால் சித்தங்கேணிச் சந்தி வரை, சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம். எதிரே வசாவிளான் மாஸ்ரர் வந்துகொண்டிருந்தார்.

இளமையில் இருந்தே அவரைத் தெரியும். 'அல்சர்' வருத்தம் வேறு இந்தியாவில் 'அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது, அலுமினியப் பாத்திரத்தில் பால் சூடாக்கிக் குடித்ததால்தான் தனக்கு அல்சர் வந்தது என்று, எப்போதும் கூறிக் கொண்டிருப்பார். அண்மைக் காலமாக என்னுடன் கதைப்பதை அவர் நிறுத்தி இருந்தார். முந்திய காலங்களில் அவர் கையில், ஒவ்வோர் வெள்ளிக்கிழமையிலும் 'சுதந்திரன்' பேப்பர் இருக்கும். பத்து வருடங்களுக்கு முன் வரை சித்தன்கேணி 'மாதர் சங்க'த்தில் வயலின் வகுப்புக்கள் நடத்தி வந்தவர். வயலின் சொல்லிக் கொடுத்த போதிலும் ''சங்கீத மாஸ்ரர்'' என்ற பெயரே நிலைத்து இருந்தது. மணமாகியதும் சொந்த ஊருடன் போய் விட்டார். பின் இரண்டாவது ஈழயுத்தத்தின் ஆரம்பத்தில் இடம்பெயர்ந்த போதே, இங்கு திரும்பவும் வந்தார்.

கடந்த பத்து வருடங்களில் வன்முறைகட்குஅதிகம் ஆளானவர். வீடு ஒன்று கிடைக்கும்வரை மாதர் சங்கத்திலே அவரது குடும்பம் தங்கி இருந்தது. அன்று வட்டுக்கோட்டையில் நடந்த தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த மாநாட்டில் முக்கிய பங்காற்றி, அந் நிகழ்வின் வெற்றிக்காக உழைத்தவர். இம்முறை அவர் இடம்பெயர்ந்து வந்தவுடன் அப்படியே மாறாமல் இருப்பார் என்ற நினைவில் அவருடன் நாட்டு நடப்புக்களைக் கதைக்கப் போனேன். பேச்சுத் தடம் மாறிப் போய், அவர் போரின் போக்கினைக் குறைபட்டுக் கொள்ள, ''போராட்டம் என்றால் கஸ்ரங்களுடன்தான் தொடரும்'' என விளக்கங்கள் அளித்தேன். நான் கூறியவைகள் எல்லாம் அவருக்கும் தெரிந்தவைதான். அன்று தலைவர்கட்கு 'இரத்தத் திலகம்' வைத்தவர். அந்தத் தலைவர்கள் பின்வாங்கவே அவரும் மாறிவிட்டார் போலும் என நினைத்துக் கொண்டேன்.

அடுத்த நாள் எதிரும், புதிருமாக இருவரும் சந்தித்தபோது அவரைப் பார்த்துச் சிரித்தேன். அவர் தெரியாதவர்போல் எங்கோ பார்த்துக் கொண்டு சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். இப்போதும் வேறுபக்கம் பார்ப்பது போல் எங்களைத் தவிர்த்துக் கொண்டார்.

''ஏன் சேர் பார்க்காததுபோல் போகிறார்?'' என்றாள் ராசாத்தி. நான் விஷயத்தை விளக்கினேன்.

''உங்களுக்கு வேறு வேலை இல்லை. நான் அந்த மனுசனிடம் வயலின் படித்தவள். மிகவும் நல்லவர் சீ... நீங்கள் இப்பிடித்தான்'' என்று ஏதேதோ கூறிக்கொண்டிருந்தாள்.

சைக்கிள் சங்கானைச் சந்தியைத் தாண்டிக் கொண்டிருந்தது. பாபுவும், வேறொருவனும் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர். பாபு எங்கள் உறவினன். ஐந்து வருடமாக 'இயக்கத்'தில் இருப்பவன். மெல்லிய சிரிப்புடன் தலையாட்டிவிட்டுப் போனான்.

சங்கானைச் சந்தையைத் தாண்டும்போது மணிக்கூட்டைப் பார்த்தேன். நேரம் 11.10 ஆகி இருந்தது. பத்து நிமிடத்தில் வீட்டில் இருந்து சங்கானைக்கு வந்துவிட்டோம். இனி 'சேர்ச் ரோட்'டில் உள்ள அவளது சினேகிதி வீட்டிற்குப் போகவேண்டும்.

மல்லாகம் போகும் சந்திக்கப்பால் சிறிது போகவும், சடுதியாக ஆகாயத்தில் பேரிரைச்சல் கேட்டது. முன்பெல்லாம்கூட ஹெலி, பொம்மர், அவ்ரோ இவற்றின் சத்தங்களையும் குண்டுகள் விழுந்து வெடிப்பதையும் நாங்கள் எல்லோரும் அறிந்தவர்கள்தான். ஆனால் இன்றுபோல் அவை இருந்ததில்லை. 'சுப்பசொனிக்' விமானங்கள் அரியாலையில், நாவற்குழியில் குண்டுகள் போட்டபோது நான் நேரில் பார்த்ததில்லை. சுப்பசொனிக் விமானங்கள் பேரிரைச்சலுடன் கண்காணாத உயரத்தில் பறப்பதைக் காதால் மட்டும் கேட்டவர்கள், இன்று கண்ணால் இரண்டு விமானங்கள் பறப்பதைக் கண்டார்கள். மிகவும் வேகமாக அவை சுழன்று சுழன்று வந்ததே எல்லோருக்கும் பயத்தை உண்டாக்கியது. கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன. மண்ணெண்ணெய்க் கடைக்காரர்கள், நடைபாதை வியாபாரிகள் எல்லாம் சாமான்களை அப்படியே விட்டுவிட்டு, பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர். ஒருவன் மதகு ஒன்றுக்குள் புகுந்து கொண்டான். அதனைக் கண்ணுற்ற இன்னும் இரண்டு மூன்று பேரும் அதற்குள் புகுந்தனர்.

மனைவி அலறத் தொடங்கிவிட்டாள். "ஐயோ! ஏன்தான் இந்தப் பக்கமாக் வெளிக்கிட்டமோ?" என்று கத்தினாள். ஓர் இளைஞன் நிமிர்த்தியிருந்த சைக்கிள்களை நிலத்தில் கிடத்தி வைத்தான்.

"ஒரு வீட்டுக்குள் போவோம்" என்றேன்.

"ஐயோ! வீட்டுக்கை யாராவது போவார்களா?" என வளவு ஒன்றுக்குள் ராசாத்தி ஓடினாள்.

"என்ரை சீலையும் சிவப்பு. ஐயோ ..!" எனக் கத்திக்கொண்டிருந்தவள் "படுங்கோ, படுங்கோ" என்றாள். நானும் விழுந்து படுத்தேன்.

மெயின் ரோட்டால் இருவர் ஓடிக் கொண்டிருந்தனர். விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டே இருந்தன. வினோதமான சத்தங்கள் கேட்டன. சாதாரணமாகக் கேட்கும் குண்டுச் சத்தங்களாக அவை இருக்கவில்லை.

"விமானத்தில் இருந்து றொக்கட் தாக்குதல் நடத்துகிறார்கள்" என்றான், பக்கத்தில் படுத்திருந்த இளைஞன். மணியைப் பார்த்தேன். நேரம் 11-30.

"15 நிமிடங்களாக வெறி ஆட்டம் நடத்துகிறார்கள். இந்த நேரம்,இதற்கு ஆணையிட்டவன் ஓர் பௌத்த ஆலயத்தில் மலர் தட்டங்களை வைத்து,

புத்தரை வணங்கிக்கொண்டிருப்பான் முழங்காலில். எம்மிடம் ஏவுகணைகள் மட்டும் இருந்திருந்தால் ...'' என்று அந்த இளைஞனிடம் கூறிக்கொண்டிருந்தேன்.

''பேசாமல் இருங்க. ஒன்றுக்குமே பயப்படாத மனுசன்'' என்று ராசாத்தி எனது வாயை அடைத்தாள்.

திரும்பவும் சுழன்ற விமானங்களிலிருந்து அதே சத்தங்கள் கேட்டன.

பின் எல்லாம் ஓய்ந்து விமானங்கள் அங்கிருந்து செல்வது தெரிந்தது. மனைவி, ''வாங்கோ மானிப்பாய்ப் பக்கமாகப் போவோம். இன்னும் ஒருக்கால் வந்தாலும் வருவான்'' என்றாள். சிறிது நின்று பார்ப்போம் என ஓர் வீட்டின் முன்புறமாகச் சென்றோம். பல சைக்கிள்காரர்கள் அவ் வீட்டுக்காரருடன் கதைத்துக் கொண்டிருந்தனர். பள்ளியால் வந்த குழந்தைகள், அவ்வீட்டின் கேற்றடியில் முகத்தில் கலவரத்துடன் நின்றனர். சேத விபரங்கள் பற்றிய வெவ்வேறான தகவல்கள் வந்து கொண்டிருந்தன. சங்கானை யூனியன் அடியில் நடந்ததைத் தான் பார்த்ததாக, ஓர் வயதானவர் கூறினார். ''பலர் உடல் சிதறி இரத்த வெள்ளத்தில் கிடக்கினம்'' என்றார். இவ்வளவும் நடைபெற்று முடிந்த பின்னும், அந்த வீட்டு மனிதர் அசையவில்லை; நிதானமாகப் பதில் கூறிக்கொண்டிருந்தார். ராசாத்தியையும் ''பயப்படாதீர்கள்'' என்றார். ''இதற்கு மேலும் வரமாட்டார்கள். அவர்களுக்கும், கீழேயும் ஆயத்தங்கள் நடைபெற்று விடும் என்ற பயம் இருக்கும். இன்று பள்ளிக்கூடங்களும் இராது. வீட்டுக்குப் போங்கோ'' என்று கூறியபடி, தனது வீட்டிற்குள் போய்விட்டார்.

சண்டிலிப்பாய் 'ராஜா ஸ்கூலில் இருந்தும் பிள்ளைகள் வந்துகொண்டிருந்தனர். அவர்களில் உயரமான பெண்பிள்ளை, தங்கள் பள்ளிக்கூடப் பக்கமாகவும் சன்னங்கள் விழுந்ததாகக் கூறினாள்.

''அப்படியானால் இன்று இரண்டு மூன்று இடங்களில் அடித்தவன்களா? ஓர் பக்கமாக அதுவும் சங்கானைப் பக்கமாகத்தானே சத்தம் கேட்டது'' என்றேன்.

எந்தவிதமான பதிலும் வரவில்லை சைக்கிளில் மெயின் ரோட்டால் வந்தவர்களும், சரியான தகவல் எதுவும் சொல்லாமல் போய்க் கொண்டே இருந்தனர்.

''மிஸிஸ் காந்தனைப் பார்க்கப் போகவேண்டுமா?'' எனக் கேட்டேன்.

''இல்லை. அவர்கள் எங்கு ஓடி இருப்பார்களோ தெரியாது. மாமியும் பயந்து இருப்பா. முதலில் வீட்டுக்குப் போவோம்'' என்றாள் ராசாத்தி.

சங்கானை யூனியன் அடியில் எதுவுமே நடைபெற்றிருக்கவில்லை. அப்படியென்றால், அந்த வயதானவர் சும்மா சொல்லியிருக்கிறார் போலும்! சண்டிலிப்பாயிலும் எதுவும் நடைபெறவில்லை எனப் பின்பு தெரிந்தது.

சங்கானையால் சித்தன்கேணிக்குச் சைக்கிள் ஓடியது. சந்தியில் பெரிய சனத்திரளாக இருந்தது. முதலில் கண்களில் தென்பட்டது, ஓர் 'எல்ப் வான்.' அதில் ஓர் சிறுவன் தலையிலும் முகத்திலும் இரத்தம் தோய நின்றிருந்தான். தலையில் காயம் போலும். இரண்டு மூன்று பேரை வானில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். டிரைவர் சீற்றில் பாபு இருந்தான். முன்பு அவனைக் கண்டு 30 நிமிடந்தான்

இருக்கும். கடைகள் எல்லாம் மூடப் பட்டிருந்தன. தவம் சந்தியில் நின்றிருந்தான்.

''என்ன நடந்தது?'' எனக் கேட்டேன்.

ஒரு நூறு மீற்றர் தூரத்திற்கு றொக்கட்டால் அடித்ததாகவும்சித்தன் கேணியில், வட்டுக்கோட்டை ரோட்டில், மாதர் சங்கத்தடியில் றொக்கட் தாக்குதல் நடந்த போது, ரோட்டில் வந்துகொண்டிருந்த சனத்துக்குப் பாதுகாப்பைத்தேட நேரம் கிடைக்கவில்லை. ரோட்டில் ஐந்து பேர், பக்கத்து வீட்டில் ஓர் வயதானவர் ஆகியோர் இறந்ததாகவும் பத்துப் பேருக்குக் காயம் எனவும், பெடியள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகிறார்கள் எனவும் சொன்னான்.

''வேறு எங்காகிலும் நடந்ததா?' என்றேன்.

''இல்லை. இங்கு மட்டும்தான்''

தொல்புரத்தில் அம்மா புளியமரத்துடன் ஒட்டியபடி நின்றிருப்பா என, நினைத்துக்கொண்டேன்.

மாதர் சங்கத்தடியில், இரண்டு உடல்கள் வெள்ளைத் துணியால் மூடியபடி வைக்கப்பட்டிருந்தன. சங்கக் கட்டிட வாசலில் சங்கீத மாஸ்ரர் நின்று கொண்டிருந்தார். நானும் மனைவியும் அவர் பக்கமாகச் சென்றோம்.

''அப்போது எங்கே இருந்தனீங்கள்?'' என்றேன்.

தாக்குதல் நடந்த அந்த 15 நிமிடமும் சங்கக் கட்டிடத்துள்ளேயே இருந்ததாகவும், இன்னும் அதிர்ச்சியிலிருந்து தான் முழுமையாக மீளவில்லை என்றும் மாஸ்ரர் கூறினார்.

''எனது அப்பா மட்டும் மயக்கம் அடைந்திருக்கிறார். எனக்கும் அதிர்ச்சியால் கை, கால் எல்லாம் பதறுகிறது. கலட்டிப் பள்ளிக்கூடத்தடியில் இருக்கும் கந்தசாமி டொக்ரரைக் கூட்டி வரவேண்டும். வருவியா ஒருக்கா?'' என மாஸ்ரர் கேட்டார்.

''ஓம். அப்படியே வந்துவிட்டு நாங்கள் வீட்டிற்குப் போகிறோம்; பின்னேரம் மறுபடியும் வருவேன்'' என்றேன்.

வழியில், ''இவற்றுக்கு என்ன செய்யலாம் மாஸ்ரர்? கடைசியில் பார்த்தியளா, எங்கட போராளிகளும் பொதுமக்களும் இணைந்துதானே ஆஸ்பத்திரிக்கு காயப்பட்டவர்களைக் கொண்டு போயினம். போராளிகளையும் மக்களையும் பிரிக்க, என்ன எல்லாம் செய்யினம்? ஆனால், அது அவர்களை மேலும் இறுகப் பிணைக்கிறது'' என்றேன்.

''சும்மா ஒன்றும் கதைக்காமல் இருங்க. அவர் எவ்வளவு பயந்து போய் இருக்கிறார்'' என்றாள் ராசாத்தி.

''இல்லை... அவர் கூறுவதில் ஏதும் பிழைகள் இல்லை. நாங்கள் எந்த மூலைக்குப் போனாலும் இவற்றில் இருந்து தப்ப முடியாது. இணைந்து போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை. இல்லையென்றால் முழுவதும் அழிந்துவிடுவோம்.''

அவரின் முகத்தைப் பார்த்தேன். கண்கள் கலங்கி இருந்தன.

''பறவையின் நிரையென
வானிடை எழுந்தன
பகைவரின் ஊர்திகளே!
சிறகுகள் துகள்பட
அவை மிசை பறந்தன
தமிழர் கருவிகளே!''

என்ற மீன்பாடும் நகரக் கவிஞனின் கவிதை வரிகளைச் சொல்லியபடி முன்னை விடச் சிறிது பலமாகச் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினார் மாஸ்ரர்.!

□□

# மதிப்பீட்டுரை

# 'உண்மைகள்'

## உண்மை உள்ளத்தின் உயிர்த்துடிப்பு

- **உண்மைகள்**
  *(உருவகக்கதைகள்)*
- **வளவை வளவன்**
- வெளியீடு:- தமிழ்த்தாய் பதிப்பகம் யாழ்ப்பாணம்.

நரி கதைக்குமா? நரியின் மொழி காகத்திற்குப் புரியுமா? என்ற கேள்விகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு தாத்தா -பாட்டி காலத்து பாட்டி வடை சுட்ட கதை செவிவழிக் கதையாக இன்னமும் எம் மண்ணில் புழக்கத்தில் இருந்து வருகிறது. நரியைக் கதைக்க வைத்தும், காக்கையைப் பாடவைத்தும் ஏமாற்றுவோர் குறித்து எச்சரிக்கை செய்த அந்தக் கதை முதலில் எவரது கற்பனையில் உதித்தது என்பது எவருக்கும் தெரியாமலேயே காலம் கடந்தும் வாழும் வரம் பெற்று நிற்கிறது. நரியும், காக்கையும் மட்டுமன்றி கூண்டுக்கிளியும், சிலந்தியும், மூட்டைப்பூச்சியும், சிட்டுக்குருவியும் என்பன போன்ற பல்வேறு உயிரினங்களோடு சேர்ந்து மூங்கில், மின்விசிறி, பூமி போன்ற சடப்பொருட்களையும் பேசவைத்து குறுகத் தறித்த கடுகளவு கதைகளாக 'வளவை வளவனி'ன் கைவண்ணத்தில் 'உண்மைகள்' அண்மையில் வெளிவந்துள்ளது. 92 பக்கங்களில் 36 தலைப்புக்களை உள்ளடக்கிய 'உண்மைகள்' தொகுப்பு தமிழ்த்தாய் பதிப்பகத்தின் அண்மைய வெளியீடாகும்.

உண்மைகளை பட்டவர்த்தனவாக-பச்சையாகச் சொல்ல முடியாத அகப் புறச் சூழல் உருவாகும்போது தான் சொல்ல விரும்பும் செய்தியை உணர்த்துவதற்கு உருவகங்களைப் பயன்படுத்தும் உத்தியை படைப்பாளிகள் கைக்கொள்ளுகின்றார்கள். அந்த வகையில், வளவை வளவன் பயன்படுத்தும் உருவகங்களையும் அதன் மூலம் அவர் உணர்த்த விழையும் உள்ளடக்கத்தையும் அவை எழுதப்பட்ட காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அவசியமானதாகிறது. உதாரணமாக பல்லி சிறு சிறு பூச்சிகளையும் விட்டில்களையும் பாய்ந்து பாய்ந்து கவ்விப் பிடித்துத் தின்னுவதும் அந்தப் பல்லியை வேலியோரத்தில் இருந்த ஓணான் லபக்கென கவ்விக் கொள்வதும் இயற்கை நிகழ்ச்சிகள் தான். ஆனால் 1989 ம் ஆண்டின் தை மாதத்தில் எழுதப்பட்டது என்னும்போது அக்காலம் மனத்திரையில் காட்சியாக விரிகின்றது. பல மொழிகளில் பேசித்திரிந்த இந்தியச் சிப்பாய்கள் எங்கள் தேசத்து வேலிப்பொட்டுகளுக்குள்ளால் ஓடி விளையாடிய காலம். தலையற்ற முண்டங்களாகவும், சடலங்களாகவும் தெருவோரங்களில் இளைஞர்கள் வீசப்பட்ட வேளை. மங்கையர்கள் மானத்தைக் காப்பாற்ற எந்த நேரமும் அவலக் குரல் எழுப்பத் தயாராக இருந்த சூழல். இந்தச் சூழலில் தான் 'மேலாதிக்கம்' என்ற இக் கதை எழுதப்பட்டது என்பதை உணரும்போது

இதன்அர்த்த பரிமாணங்கள் ஆழ அகலம், படைத்ததாகின்றது.

விரல்களுக்கிடையில் பிடிக்கப்படும் பேனா, காகிதத்தில் ஓட்டிச் செல்வதால் மட்டும் இலக்கியப் படைப்புகள் பிறப் பெடுத்துவிடும் என்பதில்லை. ஆனால் சத்திய மான அனுபவ உணர்வுகளைப் பதிவு செய்து பகிர்ந்து கொள்ளும் போது அது அதற்கே உரித்தான அழகோடு எடுப்பாக நிமிர்ந்து நிற்கிறது என்பதற்கு 'உண்மைகள்' ஒரு எடுத்துக்காட்டு. சமகால நிகழ்வுகள் எல்லோ ரையும் ஒரே மதிரியாக அழுத்தும் போதும் கொள்கலனின் வடிவத்தை தாங்கிக் கொள் ளும் திரவம் போல அவை ஒவ்வொருவரது அகத்திலும் புறத்திலும் ஏற்படுத்தும் தாக் கங்கள் வித்தியாசமானவை. கோழிச் சண்டைக்காக சேவல்களை வளர்க்கும் எஜமானர்கள் பற்றி சித்திரிக்கும் போது கூண்டில் அடைபட்ட சேவல்களாக காட்சி தருபவர்கள்மீது காறி உமிழலாமா என்று எண்ண வைக்கின்றது. ஏனெனில் 1988 ம் ஆண்டில் எழுதப்பட்ட இப்படைப்பு அன் றைய காலத்தின் எஜமானர்கள் போல நமது தெருக்களில் உலாவிய முண்டாசு கட்டிய சீக்கிய உருவங்கள் தான் கண்ணில் மின்னலிடுகின்றது. இதே போன்றே தன்னி னத்துக்கு பல்லைக்காட்டி, அந்நியர்களுக்கு வாலாட்டுகிறாயே என்று தெருநாய் சலித் துக்கொள்ளும்போது சுயநலம் வளர்ப்பு நாய்களுக்கு மட்டுமேதான் என்பதில்லை என்பது உணர்த்தப்படுகின்றது.

இவ்வாறு 'உண்மைகள்' உணர்த்தும் உண்மைகள் பலவாறாக விரிந்து செல்லும். எனினும் எல்லாப்படைப்புக்களிலும் அவை எழுதப்பட்ட காலம் சுட்டிக்காட்டப்பட வில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கதே. காலத்தோடு ஒட்டியதாக உருவகங்கள் உணர்த்தும் உண்மைகளைப் புரிந்துகொள்ள முயலும் வாசகனுக்கு இது பெரும் தடைக் கல்லாக இருக்கும் எனலாம்.

மேலும் சில படைப்புகள் அரசியல் கட்டுரைகளின் பாணியில் எழுதப்பட்டிருப்ப தும் கூட எடுத்துச் சொல்லக் கூடிய ஒரு குறைபாடேயாகும். குறிப்பாக ஒன்று மில்லாததுகளில் வரும் நாகதீபம் என்ற நாடு பற்றிய உருவகிப்பும் மன்னன் பிறே மாதித்தன், ஜெயரூபன் போன்ற சித்திரிப்பு களும் வாசகர் மனதில் பதிவுகளை ஏற்படுத் தும் என்று கூறிவிட முடியாது. இதே தன் மையான படைப்புக்கள் சில அடுத்தடுத்து இடம்பெறுவதும் கூட படைப்பாளியின் தரத்தை உயர்த்திக் காட்டுவதாக இல்லை.

அத்துடன், இப் படைப்புக்கள் கால அடிப்படையில் தொகுக்கப்பட்டிருந்தால், மேலும் செழுமைப்பட்டிருக்கலாம் என்றும் எண்ண இடமுண்டு.

எது எவ்வாறாயினும் 'உண்மைகள்' உண்மை உள்ளத்தின் உயிர்த்துடிப்பு மிக்க தொரு பதிவு. வரிகளுக்கு இடையில் வாசிப் பதற்கும், மேலும் மேலும் துருவித் துருவிச் சிந்திப்பதற்கும் நிறைய விடயங்களை உள்ள டக்கியிருக்கும் ஒரு பெட்டகம்.

— இளையவன்

□□

**''தேசபக்தப்பாடல்களும் போர்ப்பரணிகளும் உணர்ச்சி மங்கியவர்களை யும் கிளர்ந்தெழச் செய்யும் வல்லமை படைத்தவை. குறிப்பாக யுத்த ஒலிகளை நேரடியாக அவர்களின் காதுகளில் ஒலிக்கச் செய்வது இன்னும் எளிதானது''**

— பிடல் காஸ்ட்ரோ

சண்முகானந்தா
புடைவையகம்
23 [58], பெரியகடை, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவநாகரிகமான
புடைவைத் தினிசுகள்
கூறைச்சேலை வகைகள்
றெடிமேட் ஆடைகள்

போன்றவற்றிற்குப் புகழ்பெற்ற ஸ்தாபனம்.

இன்றைய நெருக்கடியான சூழ் நிலையிலும்
அத்தியாவசியமான
ஆங்கில மருந்து வகைகளுக்கு

வை. ஜி. மெடிக்கல்ஸ்.
520, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். நகரில்
அச்சு வேலைகளுக்கும்,
கலண்டர்
மற்றும்
நூல்களை அச்சிடவும்
தொடர்பு கொள்ளுங்கள்

ஸ்ரீ லங்கா அச்சகம்
(சிறந்த அச்சுப் பதிப்பாளர்கள்)
[அச்சக வீதி] 234A, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வைத்திய நிபுணர்களின் ஆலோசனைப்படி
நாம் ஆங்கில மருந்துகளை விநியோகிக்கின்றோம்.
மருந்து வகைகள், பால்மா வகைகள்
மற்றும்

குழந்தைகளுக்கான பொருட்களுக்கும்

பரணி மருந்துச்சாலை
456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தரமான ஆங்கில மருந்து வகைகளுக்கும்

குழந்தைகளுக்கான பால்மா, பிஸ்கற்

என்பனவற்றுக்கும் எம்மை நாடுங்கள்

"நோயற்ற ஆரோக்கிய வாழ்வே மனித குலத்தின் பெருஞ் செல்வமாகும்"

சக்தி மருந்துச்சாலை

காங்கேசன் துறை வீதி, சுன்னாகம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்

பாடப் புத்தகங்கள், இலக்கிய நூல்கள்,
அலுவலக உபகரணங்கள், காகிதாதிகள்
என்பனவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்

பாட நூல்களை விநியோகிப்பதில் நீண்டதொரு
பாரம்பரியத்தைக் கொண்டது

ஸ்ரீலங்கா புத்தகசாலை

காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான - தரமான

- ஐஸ்கிறீம் வகைகள்
- குளிர்பான வகைகள்
- கேக் வகைகள்
- சிற்றுண்டி வகைகள் தயாரித்து வழங்குவதில்

யாழ். நகரில் முன்னணி வகிப்பவர்கள்

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

# ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அழகிற்கு
அழகு செய்யும்
அழகிய
தங்கப் பவுண் நகைகளுக்கு

நதியா ஜுவல்லறி
2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புடவை உலகின் முன்னோடிகள் இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள், மங்களவைபவங்களுக்கேற்ற கூறைச் சேலைகள், காஞ்சிபுரம், பெனாறிஸ், பட்டு வேட்டிகளை யாழ்ப்பாணத்தில் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**சுகுணாஸ் புடவை மாளிகை**

*29, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.*

பாடசாலை உபகரணங்கள், மற்றும் அலுவலக உபகரணங்கள், காகிதாதிகளைப் பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்க.

**சோபிதா**

*363, காங்கேசன்துறை வீதி, யாழ். நகர்*